# யாழ். கோட்டைக்குள் இந்துகோயில்சாசனங்கள்!

Registered as a NewsPaper in Ceylon
விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி இல. 49
போன்: 389

மலர் 12
இதழ்: 66
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 5 ஸபர் 11 சனிக்கிழமை [18-4-70]







## கருங்கல் தூண்களில் தமிழ் எழுத்துக்கள்

— நமது நிருபர் கு. வி. மகாலிங்கம் —

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டைக்குள் இந்துக் கோவில் சாசனங்களான தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட 6 அடி கருங்கல் தூண்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இத்தூண் உடனடியாக யாழ்ப்பாணம் நூதனசாலைக்கு கொண்டுவரப்பட்டது. மற்றொரு 4 அடி கருங்கல்லும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர் கலாநிதி திரு. கா. இந்திரபாலன் தலைமையிலான குழு இக்கற்களை கண்டுபிடித்தன. இக்குழுவில் திரு வி. சிவசாமி, யாழ்ப்பாண நூதனசாலை அதிபர் திரு ஏ. கந்தையா. வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. செ. குணசிங்கம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

டச்சுக்கோட்டைக்குள் தமிழர் சாசனங்கள் இருப்பதாகத் தெரிவித்து அது பற்றி ஆராய்ந்து அறிய யாழ்ப்பாண நூதனசாலைப் பகுதியினர் கோரியதைத் தொடர்ந்தே இந்த ஆராய்ச்சிக்குழு நியமிக்கப்பட்டது.

கருங்கல்லை ஆராய்ச்சிக் குழுவினர் ஆராய்ந்து வருகின்றனர். இதன் பயனாக ஒருபக்கத்தில் 11-ம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழர் இந்துக்கோவில் ஒன்றுக்கு எழுதிய சாசனம் போல் தோற்றமளிக்கிறது. தமிழ் எழுத்துக்களைக் கொண்ட சோழர் காலத்து கோவில் தூல்களென கருதப்படுகிறது.

கருங்கல் தூணிலுள்ள எழுத்துக்களை ஆராய்ச்சிக் குழுவினர் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து வருகின்றனர். அத்தூணில் நாலில் ஒரு பகுதி ஆராய்ச்சி முடிவடைந்துவிட்டது. இக் கருங்கல் தூண்கள் நல்லூர் பகுதியிலிருந்து கோட்டை முகப்பில் வைப்பதற்காக கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றும் குழுவினர் கருதுகின்றனர்.

முதலாவது கருங்கல் தூண் டச்சுக் கோட்டை உள்வாசலருகில் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது தூணையும் யாழ்ப்பாண நூதனசாலைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரம்பன் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு பற்றியும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இக்கல்வெட்டில் திருமலை நாயக எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இது 16-ம் நூற்றாண்டு கல்வெட்டெனக் கருதப்படுகிறது.

# அப்பலோ-13 வீரர்கள் மூவரும் ஆபத்தில்லாமல் வந்து சேர்ந்தனர்!

## கடைசிக் கட்டத்தில் சிரமம் ஏதும் இல்லை


லொவல்


ஸ்விகர்ட்


ஹெய்ஸ்

ஹூஸ்டன், ஏப். 17

## ''தமிழரிடையே ஒற்றுமை தமிழரையே தாக்கும்''

### சுன்னாகம் கருத்தரங்கில் பேச்சு

உடுவில், வெள்ளி

''யாழ்ப்பாண வாலிபர் சங்கம் உதயமாகிய காலம் தொட்டு அதைச் சிதறடிக்கும் நோக்கமாகத் தமிழ்க் கட்சிகளால் எழுப்பட்ட வகுப்புவாதச் சுலோகம் தான் தமிழர் ஒன்று சேர வேண்டும்' என்பது. தமிழர் ஒன்று சேர்வது முடியாத காரியம். அப்படி ஒன்று சேர்ந்தாலும் அது தமிழரையே மீண்டும் தாக்குமென்று நாம் அன்று முதல் கூறிவந்தோம்.

1936 முதல் தமிழ்க் கட்சிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வகுப்புவாத சுலோகம் இன்றும்கூட மாறவில்லை தமிழினத்தின் ஒற்றுமைசிங்கள வகுப்புவாதிகளின் ஒற்...

...பெற்ற இக் கருத்தரங்கிற்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

திரு காரளசிங்கம் மேலும் பேசியதாவது:-

சிங்கள இனம் சிங்கள இனமாக வாழ வேண்டுமானல் தமிழினத்தைத் தாக்க வேண்டும் என்ற அரசியல் பாதையை 1958ல் நாம் நேரடியாகக் கண்டோம். இப்பாதைக்கு வழிவகுத்துக் கொடுத்தது நமது வகுப்புவாத தமிழ்க் கட்சிகள் தான்.

தமிழ்க் கட்சிகள் தேர்தலின் பின் அரசாங்கத்துடன் சேருவது அரசியல் கட...

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியா

இன்று இழுக்கப்பட்ட 294-வது தேசியசுவீப்முடிவுகள் வருமாறு:

**1-வது பரிசு**
11 E 0571 ரூ 75,460

**2-வது பரிசு**
05 G 0083 ரூ. 30,184

**-வது பரிசு**
29 Q 0515 ரூ 7,654

தலா 373 ரூபா 30 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 29 X 0920 | 15 T 0183 |
| 19 T 0312 | 13 C 0227 |
| 26 Z 0634 | 04 U 0138 |
| 02 J 0105 | 29 X 0099 |
| 18 F 0194 | 13 A 0605 |
| 07 V 0683 | 18 X 0505 |
| 09 V 0738 | 15 J 0988 |
| 16 E 0925 | 26 G 0936 |
| 13 A 0380 | 24 B 0626 |

## ''எனது கோரிக்கைகளை இரியகொல்லை நிறைவேற்றினர்''

ஊரதீவு, வியாழன்

''இன்னும் இருபது ஆண்டுகளுக்கு இன்றைக்கிருக்கின்ற அரசியல் அமைப்பின் கீழ் ஆட்சிநடக்குமானல் தமிழர்கள் என்றொரு சாகியத்தார் இலங்கையிலே வாழ்வது துர்லபம். இந்தப் பேராபத்தை உணர்ந்துதான், இதற்கு அணைபோட வேண்டுமென்று கருதிய தமிழர் சுயாட்சிக் கழகம் தமிழ்பேசும் மக்களுக்குத் தனிநாடு கோருகின்றது தமிழ் பேசும் மக்கள் தம்மைத்தாமே ஆளுகின்ற பூரண சுயாட்சி உரிமைகொண்ட அரசொன்...

...யின் துணைத்தலைவர் திரு. க. பேரம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வ. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

உண்மையான கருத்துக்களைக் கூறி நேர்மையான முறையில் சிங்கள அரசியல் வாதிகளை எதிர் கின்ற தமிழர்களுக்கு அவர்களிடம் நல்லமரியாதையுண்டு. கல்வியமைச்சர் இரியகொல்லையை எதிர்த்த ஒரே ஒரு தமிழ்ப் பிரதிநிதி நான் தான்' அதற்காக எனக்குச் செய்யவேண்டிய உதவிகளை திரு. இரியகொல்லை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிவந்தோம்.

1936 முதல் தமிழ்க் கட்சிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வகுப்புவாத சுலோகம் இன்றும்கூடமாறவில்லை தமிழினத்தின் ஒற்றுமைசிங்கள வகுப்புவாதிகளின் ஒற்றுமையை நிச்சயமாக வளர்க்கும். தமிழினம் வகுப்புவாதரீயில் ஒன்றுபட்டால் சிங்களஇனம் தமது உரிமைகளைப் பாதுகாக்க ஒற்றுமைப் படுவதும், தமிழ்ப் பிரதிநிதிகள் ஒரேகட்சியில் பிரதிநிதிகள் சபைக்குப் போக நேர்ந்தால் சிங்கள இனமும் ஒரு கட்சியில் சேர்ந்து பிரதிநிதிகள்சபைக்குச் சென்று தமிழருக்குமாருக செயல்படுவதும் தவிர்க்க முடியாதது. எனவே தமிழினத்தின் ஒற்றுமை மீண்டும் தமிழரையே தாக்கும்''

சுன்னுகம் பட்டினசபையின் ஆதரவில் நூல் நிலைய கருத்தரங்கத்தில் ''தமிழரின் இன்றையநிலையும் எதிர்காலமும்'' என்னும் பொருள் பற்றி உரைநிகழ்த்திய உடுவில்தொகுதியில் கூட்டணிக் கட்சிகள் சார்பில் போட்டியிடவிருக்கும் வழக்கறிஞர் திரு.வி.காராளசிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்,

சுன்னுகம் பட்டினசபை விளையாட்டரங்கில் நடை கண்டோம் இப்பாதைக்கு வழிவகுத்துக் கொடுத்தது நமது வகுப்புவாத தமிழ்க் கட்சிகள்தான்.

தமிழ்க் கட்சிகள் தேர்தலின் பின் அரசாங்கத்துடன் சேருவது அரசியல் கடம் பெறுவது போலாகும் கப்பம் கேட்கும் அரசியல் தலைமைதான் தமிழரின் தலைமை என்ற கருத்து சிங்கள இனத்தில் பரவிவருகின்றது. தமிழர் நல்ல முறையில் ஒற்றுமைப்படுவதையே நாம் விரும்புகிருேம்.

இப்பிரச்னைகளுக்கெல்லாம் விடுதலை கிடைக்க வேண்டுமாளுல் தமிழரிடமிருந்து பல்வேறு அபிப்பிராயங்களும் ஆட்சிமன்றம் செல்ல வேண்டும்.

வகுப்புவாத அடிப்படையில் தமிழருக்குஎதிர்காலமேயில்லை எனலாம். சிங்கள பிற்போக்கு வாதிகளுக்கு எதிராகப் போராடும் கட்சிகளுடன் தமிழரும் சேர்ந்து போராடுவதுதான் இந்நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு நல்ல எடுத்துக் காட்டாயிருக்கும். சிங்கள மக்கள் மனதில் இது ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும்.


லொவல்


ஸ்விகர்ட்


ஹெய்ஸ்

ஹுஸ்டன், ஏப். 17

**அனைத்துலகமுமே ஆவலுடனும், அச்சத்துடனும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த அப்பலோ 13 வீரர்கள் மூவரும் இன்றிரவு இலங்கைநேரம் சுமார் 11-50 மணிக்கு பத்திரமாக பசிபிக் மகா சமுத்திரத்தில் வந்திறங்கினர்.**

ஆதிமுதல் பல இக்கட்டான கட்டங்களை எதிர்கொண்டு கடக்கவேண்டியிருந்த அப்பலோ 13 வீரர்களுக்கு கடைசிக்கட்டப்பிரயாணம் சாதாரணமாகவும் சிரமமில்லாமல் அமைந்தது. கடைசி நிமிடத்தில் நெருக்கடியான கட்டங்களிலும் அப்பலோ- 13 வீரர்களும் தரைக்கட்டுப்பாட்டு நிலைய விஞ்ஞானிகளும்ஒருவரை ஒருவர் கேலியும் பரிகாசமும் செய்வதி ஈடுபட்டிருந்ததே அவர்கள் எவ்வளவு மன அமைதியுடன் இறங்கி வந்தனர் என்பதை எடுத்துக்காட்டுவதாகஇருந்தது.

குறிக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 800 யார்களுக்கு அப்பால் வந்து விழுந்த அப்பலோ கட்டளைக் கலத்தினுள் மூன்று வீரர்களும் நல்ல நிலைமையில் இருந்தார்கள்.

இலங்கை நேரம் இரவு சுமார் 10-23 மணிக்குஎந்தவித சிரமமுமில்லாமல் அப்பலோ-13 கட்டளைக்கலத்தினுள்பிரவேசித்தனர். அமெரிக்க வானொலி உலக சேவையில்அப்பலோ-13பூமிக்குத்திரும்பி வருவதைநிமிடத்துக்கு நிமிடம் விவரித்துக்கொண்டிருந்த அப்பலோ-12கப்டனை ரிச்சர்ட் கோர்டான் 'மிக நல்ல வேளையாக அவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமோ, சிரமமோ இருககவில்லை' என்று மகிழ்ச்சிபொங்க கூறினுர்.

அப்பல்லோ-13 இறங்கிய இடத்தில் பசிபிக்சமுத்திரத்தில் சோமோலா தீவுக்கு தென்கிழக்கே சீதோஷ்ண நிலையும் சீராக இருந்தது. அப்பலோ-13 வீரர்களை மீட்கும் வேலையில் ஈடுபட்ட ஹெலிகொப்டர்கள் அவர்களை மீட்டது

சந்திரனுக்குச் சென்று திரும்பிய அப்பலோ -11,12 வீரர்கள்மீட்கப்பட்டவுடன் சுகாதாரத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டதுபோல் இவர்கள் வைக்கப்படவில்லை ஆனுல் மாமூலான டாக்டர்கள் பரிசோதனை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தககது,

**ஆபத்தான கட்டம்**

கட்டளைககலத்துககுள மூன்று வீரர்களும் ஒன்ருகச் சேர்ந்துகொண்ட நிகழ்ச்

(4- ம் பக்கம் பார்க்க)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 | Z | 0634 | 04 | U | 0138 |
| 02 | J | 0105 | 29 | X | 0099 |
| 18 | F | 0194 | 13 | A | 0605 |
| 07 | V | 0683 | 18 | X | 0505 |
| 09 | V | 0738 | 15 | J | 0988 |
| 16 | E | 0925 | 26 | G | 0936 |
| 13 | A | 0380 | 24 | B | 0626 |
| 12 | C | 0069 | 22 | A | 0372 |
| 17 | P | 0653 | 21 | Q | 0051 |
| 06 | T | 0102 | 05 | M | 0267 |
| 13 | T | 0472 | 26 | L | 0799 |
| 05 | X | 0470 | 16 | E | 0849 |
| 22 | K | 0365 | 31 | A | 0661 |
| 13 | G | 0723 | 31 | D | 0744 |
| 15 | Q | 0386 | 07 | B | 0495 |
| 08 | S | 0748 | 31 | O | 0612 |
| 08 | Q | 0084 | 14 | V | 0327 |
| 17 | X | 0277 | 15 | H | 0460 |
| 33 | J | 0011 | 18 | Q | 0833 |
| 08 | E | 0863 | 07 | O | 0805 |
| 13 | K | 0026 | 10 | W | 0999 |
| 29 | V | 0683 | 20 | J | 0387 |
| 25 | A | 0853 | 07 | H | 0754 |
| 10 | Y | 0247 | 20 | B | 0264 |
| 23 | H | 0525 | 03 | L | 0017 |
| 31 | O | 0471 | 23 | G | 0658 |
| 17 | Y | 0820 | 22 | Q | 0142 |
| 07 | D | 0653 | 16 | J | 0577 |
| 13 | T | 0983 | 32 | V | 0643 |
| 29 | Y | 0569 | 23 | W | 0082 |
| 04 | B | 0180 | 29 | V | 0355 |
| 23 | N | 0590 | 30 | H | 0165 |
| 29 | R | 0443 | 19 | H | 0218 |
| 15 | E | 0901 | 33 | R | 0953 |
| 19 | B | 0781 | 29 | E | 06'5 |
| 08 | J | 0621 | 26 | W | 0201 |
| 01 | H | 0795 | 15 | V | 0820 |
| 06 | H | 0634 | 18 | X | 0963 |
| 19 | R | 0290 | 17 | J | 0397 |
| 18 | U | 0548 | 27 | X | 0285 |
| 30 | T | 0926 | 23 | X | 0238 |
| 30 | Y | 0840 | 12 | V | 0126 |
| 01 | K | 0996 | 09 | Z | 0294 |
| 30 | Γ | 0148 | 24 | S | 0256 |
| 23 | F | 0822 | 16 | Z | 0165 |
| 32 | X | 0722 | 07 | L | 0204 |
| 27 | L | 0028 | 27 | Q | 0457 |
| 15 | Q | 0408 | 23 | H | 0483 |

(இவை யாவும் உறுதிப் படுத்தப்பட வேண்டியவை)

கழகம் தமிழ்பேசும் மக்களுக்குத் தனிநாடு கோருகின்றது தமிழ் பேசும் மக்கள் தம்மைத்தாமே ஆளுகின்ற பூரண சுயாட்சி உரிமைகொண்ட அரசொன்றினை நிறுவுவதற்கு தமிழ் இளைஞர்கள் முன்னின்று போராடவேண்டும்.''

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம், வேலணை மேற்கில் நடைபெற்ற கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வேலணைக் கிராமசபை

யமைச்சர் இரிய கொல்லையை எதிர்த்த ஒரே ஒரு தமிழ்ப் பிரதிநிதி நான்தான்' அதற்காக எனக்குச் செய்யவேண்டிய உதவிகளை திரு. இரியகொல்லை செய்யாதுவிடவில்லை. எனது கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றியே இருக்கிருர்.

ஆனுல் இரட்டைவேடம் போட்டு அங்கொன்றும் இங்கொன்றும் பேசுகின்ற அரசியல் வாதிகளை அவர்கள் எள்ளளவும் மதிப்பதில்லை.

அரசாங்கப் பரிசோதகர்

# கொலை நடந்த இடத்தை படம் பிடித்தார்

யாழ்ப்பாணம், சனி

கொடிகாமம் பஸ்சாரதி வேலு கொலைசெய்யப்பட்ட இடத்தை நேற்றுக்காலைஅரசாங்க ரசாயன பரிசோதகர் பார்வையிட்டார்.

சம்பவம் நடந்த இடத்தில், சன்னங்கள் பட்ட இடங்களையும் மற்றும் சில இடங்களையும் அவர் படம் பிடித்தார்.

இவருடன் சார் ஜன் தாமோதரம், யாழ்ப்பாண இன்ஸ்பெக்டர் திரு. கே. துரைசிங்கம், சாவகச்சேரி இன்ஸ்பெக்டர் திரு. என். கதிர்காமநாதன் ஆகியோரும் வந்திருந்தனர்.

இவ்வழக்கில் சந்தேகநபர்களில் ஒருவரான நவரத்தினம் என்பவரை பொலிசார் தேடிவருகின்றனர். சம்பவம் நடந்த இடத்தில் பொலிசார் இரவு பகல் காவல் புரிந்துவருகிருர்கள்

## துணிகர திருட்டு

உடுப்பிட்டி,வெள்ளி

அல்வாய் மேற்கைச்சேர்ந்த திரு.சி.நடராசா என்பவருக்குச் சொந்தமான சுன்னுகத்திலுள்ள சப்பாத்துக் கடை ஒன்றில் துணிகரத் திருட்டு நடைபெற்றுள்ளது இனம் தெரியாத சிலர் கடைப்பூட்டை உடைத்து உள்ளே புகுந்து சப்பாத்துகள் செருப்புக்கள்முதலியனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றனராம்.

இத்திருட்டுசம்பந்தமாகச் சுன்னுகம் பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## மெயில்வண்டிக்கு வயோதிபர் பலி

மட்டுவில், வெள்ளி

தச்சன்தோப்புக்கும் நாவற்குளிக்குமிடையில் இன்று காலை கொழும்பிலிருந்து வந்தமெயில்வண்டியில் அடிபட்டு ஒரு வயோதிபர் காலமானுர்.

தச்சன்தோப்பைச்சேர்ந்த நாகமுத்து தம்பியையா என்னும் இந்த நபரின் மரணம் குறித்து சாவகச்சேரி பொலிஸ் அதிபர் திருகதிர்காமநாதன் ஸ்தலத்துக்குச் சென்று விசாரணை நடாத்தினுர் விசாரணையின்போது இவர் சித்த சுவாதீனம் அற்றவர் என்று தெரிய வந்தது, தொடர்ந்து மரண விசாரணைஅதிகாரிவிசாரணை நடத்துகிருர்.

## பஸ்சேவை சீர்கேடு

பசுபிலைப்பள்ளி, சனி

யாழ்ப்பாணம்-காளையடி பஸ்சேவையின் சீர்கேட்டினுல் பிரயாணிகள் பெரிதும் கஷ்டமுற வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாம். இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டும் எதுவிதபலனும் கிடைக்காததால் இப்பகுதி பிரயாணிகள் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளனர்.

## இளைஞன் தற்கொலை

மட்டுவில்,வெள்ளி

சாவகச்சேரி வடக்கு பெரிய மாவடி என்னும் இடத்தில் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு மரணமானுர். 16 வயதுடைய கே. பஞ்சாட்சரம் என்னும் இளைஞன் மாட்டுக்குத் தண்ணீர் வைக்கவில்லையென்று தாயார் பேசியதன் காரணமாக கயிற்றில் சுருக்கிட்டுக் கொண்டார் என்று விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு எஸ் கே திரவியநாயகம் விசாரணை நடத்தி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். சாவகச்சேரி சட்ட வைத்திய அதிகாரி திரு கே. வைத்திலிங்கம் பரிசோதனை நடாத்தினுர்.

பெரிய அளவில்

## அற்புதம் நிகழ்த்துவார்

யாழ்ப்பாணம், சனி

புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்பாள் ஆலயத்தில் நாளை கதிரமலைச்சாமி வேல்சாமி பன்னூற்றுக் கணக்கான இளநீர்க் காய்களை தமது தலையில் வைத்து உடைத்து அற்புதம் நிகழ்த்துவதுடன் தீக்குளிப்பார்.

ஆர் ஜி. உறுதியாகக் கூறுகிருர்

# "அரசு அமைக்க தமிழரசையல்ல எம்மைத்தான் நாடுவார்கள்"

கோட்டை, வெள்ளி

பம்பலப்பிட்டியிலுள்ள சிங்கள மகாஜனக் கட்சித் தலைமை நிலயத்தில் சிங்களப் புதுவருடக் கொண்டாட்டத்தை ஒட்டி, அங்கு வந்திருந்த கட்சி அங்கத்தவர்களுக்கும், பிரபலஸ்தர்களுக்கும் பலகாரமும் பாற்சோறும் கொடுக்கப்பட்டது இக்கூட்டத்தில் இருபதுக்கும் முப்பதுக்கும் இடைப்பட்ட வயதினர் பெருந்தொகையாகக் கலந்துகொண்டனர். கட்சி வேட்பாளர்கள் முதல் முதலாக கட்சித்தலைவர் திரு. ஆர் ஜி. சேனநாயக்காவின் தலைமையில் கூடினர்

இக்கூட்டத்தில் திரு. ஆர். ஜி சேனநாயக்கா பேசுகையில் வரும் தேர்தலில் நாங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவிட்டால் நிச்சயமகக நாங்கள் அரசாங்கத்தை அமைக்கும் கட்சியை கட்டுப்படுத்தக் கூடியவர்களாய் இருப்போம் என்பதில் ஐயமில்லை எமது கட்சிக்கும் சமஷ்டி கடசிக்கும் வெளிப்படையாக கொள்கையை வைத்திருக்கும் முறையில் ஓரளவு ஒற்றுமை இருக்கிறது. ஆனுல் எதிர்காலத்தில் பெரும்பான்மை பெற்றுவரும் கட்சி எமது ஆதரவை நாடவேண்டியிருக்குமே தவிர சமஷ்டிக் கட்சியையல்ல என்ருர்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் எனது கட்சி அரசியலில் இளைஞர்களுக்கு முக்கிய இடத்தைக்கொடுக்கும். வேறு எந்தக் கட்சியும் இளைஞர்களுக்கு தகுந்த இடத்தை அரசியலில் கொடுக்கவில்லை. அவர்கள் துண்டுப் பிரசுரங்கள். விநியோகிக்கவும் கொள்கை முழக்கம் செய்யவும் அட்டைகள் பிடிக்கவுமே பயன்படுத்தப்பட்டனர். பழைய மரபு வழியிலேயே இன்றைய அரசியல் கட்சிகள் சென்றுகொண்டிருக்கின்றன அரசியல் கட்சிகள் அரசியல்வாதிகளின் நிந்தமாகிவிட்டது. சிங்கள மகாஜனக் கட்சி வரும் தேர்தலில் தனது அபேட்சகர்களாக, இளைஞர்களையே பெரும்பாலும் நியமிக்கும் என்றும் கூறினுர்.

மேலும் தொடருகையில் அபேட்சகர்களுக்குரிய அனுமதிக் கடிதம் கொடுக்கப்பட்டபின் அவர்களை அறிமுகப்படுத்துவதற்காக பெரும் கூட்டம் ஒன்று தம்பதெனியாவிலுள்ள நாரம்மலை மாநகரசபை விளையாட்டுத்திடலில் ஏப்பிரல் 19-ல் நடைபெறும். இவ் அபேட்சகர்களுக்கு வேண்டிய தேர்தல் சட்டவிதிகள் விளக்கப்படும்.

ருவனவெலிசாயவிலுள்ள துட்டகெமுனுவின் சிலையின் முன் சிங்கள மக்களின் உரிமைகள் வெற்றியடையும் வரை தொடர்ந்துபோராடுவோம் என உறுதிமொழி எடுப்போம் என அவர்கூறி முடித்தார்.

உடுவிலில் 22-ம்திகதி

## ஒரே மேடையில் தமிழரசு- காங்கிரஸ்

யாழ்ப்பாணம், சனி

உடுவில் தொகுதியில் போட்டியிட விருக்கும் தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு. வி தர்மலிங்கமும் காங்கிரஸ் கட்சி அபேட்சகர் திரு. என். சிவநேசனும் ''ஏன் நாம் தேர்தலில் போட்டியிடுகிருேம்'' என்பது பற்றி இருவரும் ஒரே மேடையில் பேசவிருக்கிருர்கள்.

இம்மாதம் 22-ம்திகதி சண்டிலிப்பாய்வடக்குசன சமூகமுன்றலில்நடைபெறவிருக்கும் இக்கூட்டத்துக்கான ஒழுங்குகளைமேற்படி ச.ச.நிலையம் மேற்கொண்டுள்ளது.


# "ஈழநாடு"

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிருேம்.

### உதவி வழங்கியோர்:

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | 9, 811-07 |
| பறப்பான் கண்டல் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் மூலம் சேர்ந்த தொகை காசோலை | 638-00 |
| உயிலங்குளம் பலநோக்குச்கூட்டுறவுச்சங்கம் மூலம் சேர்ந்த தொகை காசோலை | 56-00 |
| உயிலங்குளம் மீசாம் காசோலை | 74-00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 'மர்சி பேர்குசன்' உழவுயந்திரம் 25 ஸ்ரீ 624 உடனடி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். பத்மநாதன், பெரிய அரசடி, சாவகச்சேரி. 2040

வைமன் ரேட், நல்லூரில் 2 கட்டிடக் காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க. ஆர். இராசலிங்கம், யாழ் மெற்றல் தொழிற்சாலை, யாழ்ப்பாணம், தொலைபேசி இல. 7049. 2042

## சிமெந்துக் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், சனி

யாழ். அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுஸ்தாபன 'ஏ' பிரிவுக் கோஷ்டியும், யாழ். மாநகரசபைக் கோஷ்டியும் மோதியதில் சிமெந்துக் கோஷ்டி வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இடைவேளைக்கு முன்னதாகவே சிமெந்துக் கோஷ்டி ஒரு கோலைப் போட்டு விட்டது.

இடைவேளையின் பின் இரு கோஷ்டிகளும் மிகவேகமாக விளையாடிய போதும், கோல்கள் எதுவும் போடாத நிலையில் சிமெந்துக் கோஷ்டி 1—0 கோலால் வெற்றி பெற்றது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே. நி)

அரசாங்கக் கேள்விகள்
நீர்ப்பாசனத் திணைக்களம்

என். 1557- யாழ்ப்பாண உபபிரிவிலுள்ள கனகாம்பிகைக்குளத்தில் கீழ்கை வாய்க்கால்கள் 1-7 வரைக்கும் கட்டுதற்கான கேள்விகள் அழைக்கப்படுகின்றன. மேலதிக விபரங்கட்கு 1970-4-17ந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும்.

GP 2530

## அறிவித்தல்

### தட்டாதெரு உப மின் நிலயத்திலிருந்து பயனடையும் பாவனையாளர்களுக்கு

மேற்படி உப மின் நிலையத்துடன் தொடர்புள்ள மின் இணைப்புப் பாதைகளில் அத்தியாவசிய திருத்த வேலைகள் செய்யவேண்டியிருப்பதால் 1970-ம் ஆண்டு சித்திரை மாதம் 21-ம் திகதி காலை 8 மணி தொடக்கம் காலை 4-30 மணி வரை மின்சார விநியோகம் தடைப்படுமென்பதை மேற்படி பாவனையாளர்களுக்கு அறியத்தரப்படுகிறது.

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
16-4-70. 2231

## செட்டிபுலம் வெற்றி

அல்லைப்பிட்டி, வெள்ளி

காலஞ்சென்ற திரு. மு. செல்லத்துரையின் வெற்றிக் கேடயத்துக்காக நடாத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் சரவணை திருவள்ளுவர் ச. ச. நிலைய 'பி' பிரிவுக் கோஷ்டியினரும் வேலணை செட்டிபுலம் ச. ச. நிலையக் கோஷ்டியினரும் மோதியதில் செட்டிபுலம் கோஷ்டியினர் 22-1 என்ற புள்ளிகளால் வெற்றி பெற்றனர்.

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் தங்கவேலு நடித்த
ஹரிச்சந்திரா

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கே ஆர் விஜயா நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி நடித்த
திருடன்

## கேள்வி விளம்பரம்

### பனங்காமம் கிராமசபை

பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் (ரேட்டு கல்லுப் போட்டு தார் ஊற்றி) வேலை செய்வதற்கு ரூ. 5000/-க்கு மேல் பதிவுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து 1970-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ம் திகதி காலை 10 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 10-/- கி. ச. கந்தோரில், கந்தோர் நேரங்களில் 27-4-1970 நண்பகல் 12 மணி வரைக்கும் செலுத்தி கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கேள்விப்பத்திர பிரதி ஒன்று மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு, கி. ச. தலைவருக்கு அனுப்பும் அதே திகதியில் அனுப்பவேண்டும். தான் ஒப்பந்தகாரன் என்று நிரூபிப்பவருக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்ட விபரங்கள் எதுவும் கி. ச. கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்)
ஆ. தம்பையா ஜே. பி.,
கி. ச. தலைவர்,
பனங்காமம்,
நட்டாங்கண்டல்.

கி. ச. பணிமனை,
நட்டாங்கண்டல்,
மாங்குளம்,
16-4-1970. 2232

## நிறைவு விழா

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 21-வது ஆண்டு நிறைவு விழா வரும் நோன்மதி தினத்தன்று காலை 6-00 மணிக்கு ஆரம்பமாகிறது; மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிளோட்டப் போட்டி, வினோத உடைப் போட்டி என்பன விழாவில் இடம் பெறும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 18—4—70

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை,

உடுப்பிட்டித் தொகுதி

## சமசமாஜ கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், சனி

உடுப்பிட்டி தொகுதியில் சமசமாஜக்கட்சி சார்பில் போட்டியிட விருக்கும் திரு. அர். ஆர். தர்மரத்தினம் தமது கட்டுப்பணமான 250 ரூபாவை நேற்றுமுன்தினம் கட்டினார். இப்பணத்தை அகில இலங்கை ஐக்கியமோட்டார் தொழிலாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை அங்கத்தவர்கள் அவரிடம் வழங்கினார்கள்.

உடுப்பிட்டித் தொகுதிக்குக் கூட்டாட்சிக்கட்சிகளின் அபேட்சகர்யார் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்று திரு. தர்மரத்தினம் நமது நிருபரிடம் கூறினார்.

கூட்டாட்சிக்கட்சியினர், உடுப்பிட்டித்தொகுதியில் ஒருவரை நிறுத்த முடிவு செய்திருப்பதாகவும் அந்த அபேட்சகர் யார் என்பது இன்னும் முடிவாகவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தாம் உடுப்பிட்டித்தொகுதியில் சமசமாஜகட்சி சார்பில் போட்டியிடுவது நிச்சயமென்றும் அவர் கூறினார்.

உடுப்பிட்டியில் கூட்டாட்சிக் கட்சிகள் சார்பில் போட்டியிடத்தமக்கு அனுமதிச்சீட்டு கிடைத்து விட்டதென, திரு. பொன்: குமாரசாமி கூறியிருப்பதில் உண்மையில்லையென்றும், அனுமதிச் சீட்டு எவருக்கும் இன்னும் வழங்கப்படவில்லையென்றும், இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர், அனுமதிச்சீட்டு வழங்கப்படுமென்றும் திரு. தர்மரத்தினம் தெரிவித்தார்.

0 0 0

யாழ்ப்பாணம். வெள்ளி

தமிழரசுத் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தின் தேர்தல் கட்டுப்பணத்தை வழமைபோல் இம்முறையும் மல்லாகம் கிராம மக்கள் வழங்க முன்வந்துள்ளனர். இதற்கான நிதிசேகரிப்புக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது தலைவராக: திரு. வ. கமயில்வாகனம், காரியதரிசியாக: திரு. மு. நாகேந்திரசா[illegible]வும், இணைத் தனாதிகாரிகளாக: திருவாளர்கள் வ. உமாமகேசன், இ. தம்பித்துரை ஆகியோரும் பத்துப்பேர்கொண்ட [illegible] சபையும் [illegible] ப[illegible]ள்ளது இம்மாதம் 21ம் திகதி பணத்தைத் திரு. ஏஸ்.

## அபேட்சகர் செலுத்தினர்

கரபந்தாட்டம்

## 'கிறீன்பீல்ட்' சாம்பியன்

யாழ்ப்பாணம், சனி

அரியாலை சனசமூக நிலையத்தின் 51-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப்பட்ட கரபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகம் சாம்பியனாக வந்தது.

சாம்பியனாக தெரிவு செய்யப்பட்ட கிறீன்பீல்ட்' கழகத்துக்கு, அரியாலை சனசமூக நிலையம் தேநீர் கோப்பைகளை பரிசாக வழங்கியது. (தே. நி)

## தமிழரசு வாலிப முன்னணிக் கிளை

சித்தன்கேணி, வெள்ளி

சித்தன்கேணி கலைநகர் தமிழரசு வாலிப முன்னணி ஆரம்ப விழா அண்மையில் நடைபெற்றது. மூளாய் ரேட்டிலுள்ள தண்ணீர்த் தொட்டியிலிருந்து வட்டுக்கோட்டைத் தமிழரசுக் கட்சி அபேட்சகர் திரு. அ. அமிர்தலிங்கம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். சித்தன்கேணி கலைநகர் தமிழரசு வாலிப முன்னணிக் காரியாலயத்தைத் திறந்து வைத்து திரு. அ. அமிர்தலிங்கம் பேசினார்.

சித்தன்கேணி கலைநகர் தமிழரசு வாலிப முன்னணி நிர்வாக சபையினராகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. மு. நல்லசேகரம்பிள்ளை. உப-தலைவர்: திரு. மு. வேதானந்தசிவம், செயலாளர்: திரு. த. இராசலிங்கம் உப-செயலாளர்: திரு. க. நவரத்தினம், பொருளாளர்: பொன். ஸ்ரீபத்மகோபால், உப-பொருளாளர்: திரு. வ. மங்கலேஸ்வரன் பரிசோதகர்: திரு. பி. வயிரவநாதன். ஏழு பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்ட[illegible]

## வான் டிராக்டர் மோதல்

உடுப்பிட்டி, வெள்ளி

# "தமிழர்களைகாட்சிப்பொருளாக்கி அரசாங்கம் பயன்பெற்றது"

## நாரந்தனையில் வி. நவரத்தினம்

ஊரதீவு, வெள்ளி

''தமிழர்களின் ஒத்துழைப்புடன்தான் இலங்கையிலே அரசாங்கம் நடைபெறுகின்றது என்பதை வெளிநாடுகளுக்குக் காட்டினார்கள். ஐக்கிய தேசியக்கட்சியினர். தமிழர் ஒருவர் மந்திரியாக இருக்கின்றதைச் சுட்டிக்காட்டி, இலங்கையிலே ஸ்திரமான அரசாங்கம் நடைபெறுவதாக வெளிநாடுகளுக்கு உணர்த்தினார்கள்.

அங்ஙனமாக வெளிநாடுகளுக்கு கூறி, வெளிநாட்டு ஆதரவின் மூலம் 22க்கு மேற்பட்ட முன்னேற்றத் திட்டங்களை அரசாங்கம் இலங்கையிலே செயற்படுத்தியது. ஆனால் அதில் எதுவும் தமிழ்ப் பகுதிகளுக்கு வழங்கப்படவில்லை.

தமிழர்களைக் காட்சிப் பொருளாகக் காட்டிப் பெறப்பட்ட இத்திட்டங்களைத் தமிழர்கள் அனுபவிக்க முடியாமைக்கு காரணம் ஆட்சிபீடம் சிங்களவர்களிடம் இருப்பதே. எனவேதான் தமிழர்களுக்கும் அரசியல் அதிகாரம் வழங்கப்படவேண்டுமென்று எமது கழகம் கோருகிறது''

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும், ஊர்காவற்றுறை தொகுதியின் கழக வேட்பாளருமான திரு. வ. நவரத்தினம், நாரந்தனையில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இன்னும் இருபது ஆண்டுகளுக்கு இன்றைய அரசியலமைப்பு நீடிக்குமானால் நிச்சயமாக இலங்கையில் தமிழர் என்றொரு சாகியத்தார் இருக்கமுடியாது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள்மீது எனக்கு அபார நம்பிக்கையுண்டு. கடந்த காலங்களில் அறப்போர் இயக்கங்களுக்கு அறைகூவி அழைத்தபோதெல்லாத் அவர்கள் தயங்கியது கிடையாது. எந்த விதமான தியாகமும் செய்வதற்கு அவர்கள் பின்நின்றது கிடையாது இன்று அவர்களின் உணர்ச்சியெல்லாம் அதலபாதாளத்தில் போய்க்கிடக்கிறது. அதைத் தட்டியெழுப்பி, எமது இலட்சியத்தில் நம்பிக்கை வைக்கச் செய்வது கடமை உணர்ச்சிகொண்ட தமிழ் வாலிபர்களின் கடமையாகும்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் சந்தேகப் பிரசைகளாகக் கணிக்கின்ற அடையாள அட்டை மசோதாவை எதிர்த்த ஒரேயொரு தமிழ் பிரதிநிதி நான் என்று கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

நான் பாராளுமன்றத்தில் நடந்துகொண்டது சரி என்றும், என்னைத் தமிழரசுக் கட்சி நிபந்தனையின்றிச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் நான் தமிழரசுக்கட்சியிலிருந்து விலக்கப்பட்டவுடன் தமிழரசுக்கட்சியின் தீவுப்பகுதி மாவட்டக் கிளை தீர்மானித்தது. தீவுப்பகுதி மக்களின் கருத்தைத் தமிழரசுக்கட்சி காலில்போட்டு மிதித்தது.''

தேர்தலில்

## தனியார் வாகனங்கள் பயன்படுத்தப்படும்

கோட்டை, வெள்ளி

தனியார், கைத்தொழில் அபிவிருத்தி வேலைகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட எல்லாத் தனியார் வான்கள், கார்கள், ஜீப்கள் ஆகிய வாகனங்களை பாவிப்பதற்கு அவர்களுக்கு அரசாங்கம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுவதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. தேர்தல் வேலைகளுக்கு வாகனங்கள் பற்றுமலிருப்பது காரணமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது இவ்வாகனங்களை அரசாங்க அதிகாரிகள் தேர்தல் வேலைகளுக்குப் பாவித்து, வாக்களிப்பு முடிந்துவுடன் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள்

## 'ஐந்து ஆண்டுகளில் தமிழரசார்சாதித்ததுஎன்ன?

கோப்பாய், வெள்ளி

'65-ம் ஆண்டுத் தேர்தலின் பின்னர் நாம் பிரதமருடன் ஒப்பந்தம்செய்தோம். தேசிய அரசாங்கம் அமைக்க ஒத்துழைத்தோம். நிபந்தனையின்றி நாம் அரசாங்கத்தை ஆதரிக்கவில்லை. பிரதமர் அரசாங்கம் அமைக்க எங்கள் ஒத்துழைப்பை நாடி வந்தார். இதனை மாற்றுக் கட்சிக்காரர்கள் சிந்திக்க வேண்டும்'' என நல்லூர் சந்தை மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் சோப்பாய் முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை கூறினார்.

டாக்டர் திரு வ. செல்லப்பா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

கடந்த 5 ண்டுகாலங்களில் தமிழரசுக்கட்சியினர் என்ன செய்தார்களெனச் [illegible] சபைவிவகாரத்தை அரசாங்கம் கொள்கை ரீதியிலாவது ஏற்கச்செய்தோம். தமிழ் அரசுக்கட்சியினரின் போராட்டத்தினால் திட்டமிட்டசிங்களக்குடியேற்றம் தவிர்க்கப்பட்டது. மலையக மக்கள் மத்தியில் கட்டாய நாடு கடத்தல் நீக்கப்பட்டது. தமிழ்ப்பிள்ளைகளின்போதனா மொழி விஷயத்தில் தமிழையே முக்கிய பாடமாக்கினோம். சிறுபான்மைத் தமிழ்மக்கள் பிரச்னைக்காக தொடர்ந்து போராடி வருகிறோம். இதேசமயம் மற்றும் தமிழ்க்கட்சிகள்சாதித்ததென்ன என நாம் சிந்திக்க வேண்டும். அவர்கள் சைவத் தமிழர்களைச் சிங்கள பௌத்தர்களாக்கும் திட்டத்துக்கு அரசாங்கத்துடன் ஒத்துழைத்தார்கள். பல்கலைக் கழகப் பிரச்னையை எழுப்பி தமிழ்மக்களை சாதி, மத, பிரதேசவாரியாகப் பிரிக்கமுயல்கிறார்கள்.

உடுவில் முன்னாள் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி 4 காட்சிகள் நடித்த

# திருடன்

## யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் — பாரதி

மனோகர், நிர்மலா, ஓ. ஏ. கே. தேவர்

ஹரி கிருஷ்ணன்

மற்றும் பலர் நடித்த

# தங்கச் சுரங்கம்

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

வெற்றிகரமான 3 வது மாதம்

கெப்பிட்டல்


(கொழும்பு)

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்



## சிவாஜிகணேசன் - பத்மினி

பாலையா, நாகேஷ், நம்பியார்

ஏ.வி. எம். ராஜன் மனோரமா

மற்றுபலர் நடித்த

சிவாஜிகணேசன் அளிக்கும்

# தில்லானு மோகனும்பாள

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை)

ஆகிய திரைகளில்

முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்

ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணநிதி

நடித்த

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# சுபதினம்

பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-10 முத்திநெறி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 லெனின் நூற்ருண்டு நிகழ்ச்சி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.

## வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 10-00

பிரிபோயா, போயா 2-30 மணி

என். டி. ராமராவ்-பத்மினி

நடித்த

## லவகுசா

(கேவா கலர்

## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30 9-30

பிறிப்போயா, போயா 2-30

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி

நடித்த

## மாடப்புரு

## MANOHARA

JAFFNA

Daily 4-45, 7&9-45 p m

Stephen Boyd

in

CARNIVAL OF THIEVES

(Pathe-colour)

## REGAL JAFFNA

Daily 4-45, 7&9-45 p.m.

Poya, pre poya 4 shows

Sidney James

Angela Douglas

in

CARRY ON UP THE KHYBER

(adults only)

வ. உமாமகேசன், இ. தம்பித்துரை ஆகியோரும் பத்துப்பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப் பட்டுள்ளது இம்மாதம் 21ம் திகதி பணத்தைத் திரு. எஸ். ஜே. வி.யிடம் ஒப்படைப்பார்கள்.

0 0

யாழ்ப்பாணம், சனி

உடுப்பிட்டித் தொகுதியில் சுயேச்சை அபேட்சகராக போட்டியிடவிருக்கும் கரணவாய் வடக்கைச் சேர்ந்த புறக்டர் கே. பிள்ளையினர், நேற்று முன்தினம் காலை தமது கட்டுப்பணமான 1000 ரூபாவை கட்டினர்.

## வான் டிராக்டர் மோதல்

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடியில் வானென்றும் டிராக்டரும் மோதி விபத்துக்குள்ளாகின.

வான்சாரதி ஆறுமுகம் என்பவர் காயங்களுடன்மந்திகைஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறர். வானில் வந்த பிரயாணிகள் சிலரும் சிறுகாயமடைந்தனர். வான் முன்பக்கம் பலத்த சேதமடைந்துள்ளது.

டிராக்டரும் சேதத்துக்குள்ளாகியது.

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 5-ம் திகதி [18 -4-70]

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடம் உண்டு காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும். பெற்றேர்களாயின் ஆதரவும் கிடைக்கும். தொழில்துறையிலும் வெற்றி உண்டு.

**ரிஷபம்**- புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும் தொழில்துறையில் புதிய சாதனை உருவாகும். கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும். இடமாற்றத்துக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம்.

**மிதுனம்**- சகோதரபாசம் தலைதூக்கி நிற்கும். பிதாவழிச்சுகம் கிடைக்கும். கைத்தொழில்விருத்திக்கு இடமுண்டு. முதியவர் ஒருவரின் அறிவுரைகள் முன்னேற்றத்தை அளிக்கும்.

**கடகம்**- மனதில் விரக்திநிலை தென்படும். உடல்நலமும் பாதிக்கப்படலாம். கால்நடைகளினுல் நஷ்டம் ஏற்படும். பூமிப்பிணக்குகளின் மூலம் வழக்குவிவகாரங்களிலும் மாட்டிக்கொள்ளநேரிடலாம்.

**சிம்மம்**- சிந்தனைகளின் தாக்குதல்கள் உங்களைச் சந்திக்கவைக்கும். குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச்செலவுக்கும் இடமுண்டு. அவசரமுடிவைத் தவிர்க்கவும்.

**கன்னி**- நிதியில் அபிவிருத்தியுடன் நின்மதி பிறக்கும். பந்துக்கள் கொண்டாட்டமும் விருந்தும் உண்டு. பேச்சில் நிதானம் பெருமையைத் தேடித்தரும்,

**துலாம்**- செய்தொழிலில் தடைகள் உருவாகும். மேலதிகாரிகளின் கழுகுப் பார்வை உங்கள் பக்கம் திரும்பும். சகோதரர் ஒருவருடன் பகைத்துக்கொள்ள வேண்டியும் ஏற்படலாம். நிதானம் நன்று.

**விருட்சிகம்**- எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம். பத்திரிகைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் அதிக பயனடைவர். நீண்டநாள் எதிர்பார்த்த பொருள்வரவு இன்று கிடைக்கும். அறிஞர் ஆலோசனையும் கிடைக்கலாம்

**தனுசு**- வாழ்க்கை மந்தநிலையில் நடைபெறும். எதிர்பாராத தடைகளால் முன்னேற்றம் பாதிக்கப்படும். சகோதரவழிமூலம் சஞ்சலமான செய்தியும் கிடைக்கலாம் உடல்நலத்தை பேணவும்.

**மகரம்**- ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள். பூமிப்பிணக்குகளால் கவலை தோன்றக்கூடும். தொழில்புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறுபிணிக்கும் இடமுண்டு. பொறுமை நன்று.

**கும்பம்**- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்ப பிரச்னைகளில் சுமூகமான நிலை தென்படும் சுற்றுடலிலும் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும். இன்று பொன்னுள்.

**மீனம்**- வேண்டிய ஒருவரை பகைத்துக்கொள்ள நேரிடலாம். அவசரப்போக்கினுல் ஆபத்துக்கள் விளையும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும். சகோதரவழியாலும் சஞ்சலமுண்டு.

இவ்வாகனங்களை அரசாங்க அதிகாரிகள் தேர்தல் வேலைகளுக்குப் பாவித்து, வாக்களிப்பு முடிந்துவுடன் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள் என அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

——

## கவிஞருக்குப் பாராட்டு

ஊர்காவற்றுறை, வெள்ளி

'தாய்' என்றகவிதை நூல் ஆசிரியரான சரவணையூர்க் கவிஞர் தில்லைச்சிவனுக்கு அண்மையில் மாலை சரவணை சேவா மன்றத்தினர் பாராட்டுவிழா நடாத்தினர் சரவணை சேவா மன்றத்தின் பத்தாவது ஆண்டுவிழாவையொட்டி நடைபெற்ற இவ்விழாவிற்கு வேலணை மத்திய கல்லூரி உதவி அதிபர் திரு. வி. பொன்னுத்துரைதலைமை தாங்கினர்.

சரவணை கிராமமுன்னேற்றச்சங்கமண்டபத்தில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவில் சேவா மன்றச் செயலாளர் திரு. மு. சண்முகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

பிரதம விருந்தினர்களாக சுருவில் திரு. இ. மாணிக்கம் தம்பதிகள் கலந்து கொண்டனர்.

இரசிகமணி கனக செந்திநாதன் முதலில் பாராட்டிப் பேசினர்.

திரு. சி. திருநாவுக்கரசு, திரு. செ. சதாசிவம். சில்லையூர் செல்வராசன், சேவா மன்றத்தலைவர் திரு. வை பேரம்பலம் உட்பட வேறு சிலரும் பாராட்டுரை வழங்கினர்

இவ்வைபவத்தைத்தொடர்ந்து கவிஞர் தில்லைச்சிவனுக்கு சரவணை சேவா மன்றத்தலைவர் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்.

— —

## ஆசிரியர் கழக உத்தியோகத்தர்

புதுக்குடியிருப்பு, வெள்ளி

முல்லைத்தீவு வட்டாரத்தைச்சேர்ந்த புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய ஆசிரியர்கழகவருடாந்தக்கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் கழகத்தலைவர் திரு. கே. சிதம்பரப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர். தலைவர்: பிரம்ம ஸ்ரீ ந கந்தசாமி ஐயர், உபதலைவர்: திரு சி. தர்மலிங்கம், செயலாளர் கவிஞர் திரு முருகசூரியன், உப செயலாளர்: திருமதி ம கார்த்திகேசு தனதிகாரி: திரு மெ இரத்தினசிங்கம், கணக்குப்பரிசோதகர்: திரு சி வைரவிப்பிள்ளை நிர்வாக சபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

வது:

கடந்த 5 ண்டுகாலங்களில் தமிழரசுக்கட்சியினர் என்ன செய்தார்களெனச் சிலர் கேட்கிறர்கள். இந்நாட்டின் அரசாங்க ஊழியர் பிரச்னையைதீர்த்தோம். 66-ம் ஆண்டு ஜனவரியில் தமிழ்மொழிச் சட்டவிதிகளை அமுலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மாவட்ட தேசவாரியாகப் பிரிக்கமுயல்கிறர்கள்.

உடுவில் முன்னுள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி தருமலிங்கம், சி பத்மநாதன். பண்டிதர் நா. இராசையா, கிளிநொச்சித் தொகுதி வேட்பாளர் திரு. எம். ஆலாலசுந்தரம் உட்பட பலர் பேசினர்.

# இலங்கை தமிழ்சஞ்சிகைகள் படிப்பது கேவலமாம்

யாழ்ப்பாணம், சனி

'இலங்கையில் பொதுமக்கள் மத்தியில் இலக்கியத் துறையில் நல்ல விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதை ஆக்க பூர்வமான வழிகளில் பயன் படுத்தினுல்தான் வருங்காலத்தலைமுறை நல்ல பயன்பெறமுடியும்.'

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மல்லிகை 'லெனின்' மலர் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய டாக்டர் ரி. வாமதேவன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

டாக்டர் வாமதேவன் தொடர்ந்து கூறியதாவது: படித்தவர்களெனச் சொல்லிக் கொண்டு தங்களுடைய தாய்மொழிக்கோ அல்லது தாய் நாட்டிற்கோ சேவை செய்யலாம் ஒதுங்கியிருப்பவர்களின் தொகை தமிழர்களிடம் தான்அதிகம் இதை மாற்றியமைப்பதும் அவர்கள்கையில் தான் உண்டு. இதேபகுதியினர் இலங்கைத் தமிழ் பத்திரிகைகளை அல்லது சஞ்சிகைகளை படிப்பது கேவலம் என்ற ஒருமனப்பான்மையில் இருக்கின்றனர்.

உண்மையில் சொல்லப்போனுல்இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதாகவே சொல்லவேண்டும்,

மல்லிகையை பொறுத்தவரை அதன் வளர்ச்சி ஈழத்தில் ஒரு இலக்கியதாக்கத்தை ஏற்படுத்திவருகிறது.

திருவாளர்கள் ஈழத்து சிவானந்தன், செம்பியன் செல்வன், தெணியன் ஆகியோரும் பேசினர்கள். திரு. டொமினிக் ஜீவா கன்றியுரை கூறினர்.

## "இன்று எமது முக்கிய தேவைகள்: சமாதானம், ஒழுங்கு, ஒற்றுமை"

மட்டுவில், வெள்ளி

இன்று நமது சமூகம் பின்தங்கியநிலையில்இருந்து கொண்டிருப்பதற்கு முக்கியகாரணமாக அமைந்துள்ளபொருளாதார நிலையை உயர்த்துவதற்கும், எமது அத்தியாவசிய தேவைகளான. உணவு உடை போன்ற அதிமுக்கிய பொருட்களை உற்பத்தி செய்து அதன் மூலம் நம்மைநாமே பாதுகாத்துக்கொள்ளக்கூடிய நிலையை அடைவதற்கும் சமாதானம் ஒழுங்கு ஒற்றுமை ஆகிய 3 அம்சங்களும் இன்று எமக்கு முக்கிய தேவைகளாகும்"

இவ்வாறு பச்சிலைப்பள்ளி பொதுமக்களாலும் பளை பொலிசாரினுலும் கொண்டாடப்பட்ட புதுவருட தேசிய விழாவிற்குத்தலைமை தாங்கிப் பேசிய பச்சிலைப் பள்ளி காரியாதிகாரி திரு எஸ். அருணசலம் தனது தலைமையுரையின் போது கூறினர் பளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த விழாவை யாழ்மாவட்ட உதவி பொலிஸ் அதிபர் திரு. பி. டி சில்வா தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

உதவி பொலிஸ் அதிபர் திரு. எஸ். பி. டி. சில்வா பேசுகையில் சமாதானமும், ஒழுங்கும் அமைதியும் நிலைநாட்டப்படும் ஒரு நாட்டிலே, குற்றங்கள் பெருகுவதற்கு இடமிருக்க முடியாது. எனவே எழுது புத்தாண்டு நற் சம்பிரதாயமாக நமது மத்தியில் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதென இன்றே பிரகடனம் செய்து கொள்வோம் என்றார்.

விளையாட்டுக் கழகங்கள், நெசவுநிலையங்கள் பாடசாலைகள் ஆகியன வற்றிலிருந்தும் விளையாட்டுக்களும் கலை நிகள்ச்சிகளும் இடம் பெற்றன. அடுத்து திரு. வி. சேனுதிராசா திரு. சரத் சந்திரநாயக்கா ஆகியோரும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர். பளைப் பகுதி கிராம சேவையாளர் திரு. எஸ். சின்னத்தம்பி நன்றியுரை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடியாவிலும் வியட்னும் நிலைமை ஏற்படும்?

## ஆயுதக்கோரிக்கை பற்றி அமெரிக்கா ஆலோசனை

## புதிய ஆட்சியைக்கடைசிவரை எதிர்ப்பேன் என்கிறார் சிகானுக்

நியூயோர்க், ஏப்ரல் 17

**கம்போடிய அரசு அமெரிக்காவிடம் ஆயுதங்கள் தருமாறு கேட்டிருக்கின்றது. இந்தக் கேள்வி பற்றி அமெரிக்க அரசு தீவிரமாக ஆலோசித்துவருகின்றது.**

கம்போடியா மீது தாக்குதல் ஆரம்பித்திருக்கும் வியட்காங்கியரையும், வட வியட்னமியரையும் எதிர்த்துப் போராடுவதற்கு வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை எதிர்பார்ப்பதாக கம்போடியா அறிவித்திருந்தது தெரிந்ததே நிபந்தனையற்ற முறையில் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவதாக கம்போடியாவின் புதிய ராஜியத் தலைவர் ஜெனரல் லோவ் நொல் அறிவித்திருந்தார். அதேசமயம் ஆயுதங்கள் தந்துதவும்படி அமெரிக்காவையும் கம்போடியா கேட்டுக்கொண்டிருக்கின்றது. கம்போடியாவின் இக்கோரிக்கை பற்றி அமெரிக்க அரசு தீவிரமாக ஆலோசித்துவருவதாகத் தெரிகின்றது.

### இன்னொரு வியட்னும்

கம்போடியாவுக்கு ஆயுதம் வழங்குவதற்கு அமெரிக்கா முடிவுசெய்யுமானால் கம்போடியா இன்னுமொரு வியட்னமாக மாறக்கூடும் என்று அவதானிகள் கருத்து வெளியிடுகின்றனர். தென் வியட்னமிலிருந்து அமெரிக்கா வெளியேற வேண்டுமென்ற கருத்து வலுப்பெற்றுவரும் இந்தவேளையில் கம்போடியா பிரச்னையிலும் அமெரிக்கா மாட்டிக்கொள்வதை அமெரிக்க காங்கிரஸ் சபை விரும்பாதென்றும் கருதப்படுகின்றது

இதே வேளையில் அமெரிக்காவின் வியட்னும் கொள்கைகளை எதிர்ந்து பல நகரங்களில் கடுமையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறத் தொடங்கியிருக்கின்றன. மான்செஸ்டர் நகரில் படுமோசமான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. வீடுகளுக்குத் தீயிடுவதும், வாகனங்களை நொருக்குவதும், கட்டடங்களுக்கு கல்லெறிவதும் சர்வசாதாரணமாக இடம்பெற்றுள்ளன. சூறையாடலும் தாக்குதல்களும் கடுமையானதால் இப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்புகளில் 200 ஆர்ப்பாட்டக்காரர்களும் 17 பொலிசாரும் காயமடைந்தனர்.

அதிபர் நிக்ஸனின் வியட்னும் கொள்கையை எதிர்த்து கடந்த வருடம் இதே போல் பெரும் ஆர்ப்பாட்டங்ள் அமெரிக்காவில் இடம்பெற்றன. இப்பொழுது மீண்டும் வியட்னும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகியிருப்பதால் கம்போடியா விஷயத்தில் அமெரிக்கா மிகவும் எச்சரிக்கையாக நடந்துகொள்ளுமென்று கருதப்படுகின்றது.

### யுதாண்ட் செய்தி

கம்போடியாவிலுள்ள மீகொங் ஆற்றில் மிதந்து வந்த மனித சடலங்கள் பற்றி தமக்குத் தகவல்கள் வந்திருப்பதாக ஐ. நா பொதுச் செயலாளர் யுதாண்ட் அறிவித்திருக்கிறார். வியட்னமியர்களின் சடலங்கள் இவையென்று கருதப்படுவதாகவும் மொத்தம் 200க்கு மேற்பட்ட பிரேதங்கள் மிதந்துவந்ததாகவும் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக யுதாண்ட் அறிவித்தார்.

### இளவரசர் சிகானுக்

கம்போடியாவில் ஏற்பட்டுள்ள புதிய அரசாங்கத்தை வீழ்த்திய பின்னர் ஆட்சியைக் கைப்பற்றுவதென்ற பிரச்னையே தமக்கிருக்காது என்று பதவிநீக்கம்செய்யப்பட்ட அதிபர் இளவரசர் சிகானுக் அறிவித்திருக்கிறார்

புரட்சி அரசாங்கத்தை வீழ்த்துவதற்காகத் தாம் அயராது பாடுபடப்போவதாக பீகிங்கில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்

## 'அந்தஇரகசியத்தை இப்போது கூறமாட்டேன்'

— என். எம்.

கிரிமெத்தியான, வெள்ளி 'நாட்டிலுள்ள அநேக முதலாளிமார்கள் ஐக்கிய தேசிய கட்சியை ஆதரித்துக்கொண்டிருப்பதால் ஐக்கிய தேசியக் கட்சியை வெல்லுதல் இலகுவானகாரியமல்ல. இந்த முதலாளிமார்கள் யாவரும் தேசிய அரசாங்கத்தினால் பெருநன்மையடைந்தவர்கள். இந்த அரசாங்கத்தினால் நசுக்கப்பட்ட ஏழைமக்கள் நிச்சயமாக மே மாதம் 27-ம்திகதி இவர்களை அதிகாரத்தில் இருந்து தள்ளிவிடுவார்கள்.

தன்கோட்டுவாவில் நடைபெற்ற பிரசாரக்கூட்டமொன்றில் உரையாற்றிய லங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் டாக்டர் எம். எம். பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கு ப் பின் கூட்டணியினர் பதவிக்கு வருவது நிச்சயம். பதவிக்கு வந்ததும் ஏழைமக்களின் கஷ்டங்களைப் போக்க உழைக்கும். தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் உடுபுடைவைகள் உணவு வகைகள் ஆகியவற்றின் விலைகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. கூட்டணி முதலாவதாக இவற்றின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளும். திரு. டட்லி சேனநாயக்கா நாங்கள் எப்படி 2 படி அரிசியை மக்களுக்கு வழங்குவோம் என கேட்கிறார். ஆனால் இரகசியத்தை நாங்கள்இப்போது கூறத்தயாராகவில்லை எனக் கூறினார்.

திருவாளர்கள் எஸ். கே. கே. சூரியாராய்ச்சி, ஒகஸ்டீன் பொன்சேகா, ரத்னசிறி விக்கிரமநாயக்கா உட்படப் பலர் உரையாற்றினர்.

எதிர்கட்சியினர்

## 'மகாவலி மசோதா விவாதத்தின் போது ஏன் ஓடினர்'

— ஹாருள்ள

பொலநறுவை, வெள்ளி 'மகாவலி திருப்புத்திட்டம் நாட்டிற்குப் பெருநன்மையளிக்கும் என்பதை எதிர்க்கட்சியினர் நன்கு அறிந்துள்ளார்கள். எனவே இத்தகைய தொரு அபிவிருத்தித் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க அவர்களுக்கு மனம் வரவில்லை. ஆதலால்தான் மகாவலி மசோதா ஆட்சிமன்றத்தில் விவாதிக்கப்படும் வேளையில் அவர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.'

கந்துளை மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் போக்குவரத்து அமைச்சர் திரு [illegible]ருளை மேற்கண்டவாறு [illegible]ப்பிட்டார்.

எதிர்க்கட்சிகளின் மகாவலி பற்றியகண்டனங்களுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் [illegible] கடனை [illegible] [illegible]தலாகப்பெறவில்லை. திரு. காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு சி பி டி. சில்வா [illegible] கையில், மகாவலித்திட்டம் இன்று ஆரம்பிக்கப்பட்டதல்ல. பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்திலேயே இத்திட்டத்தைநான் ஆராய்ந்தேன். இதனால் ஆரம்ப வேலைகள் அப்பொழுதே பரீட்சார்த்தமாகச் செய்து பார்க்கப்பட்டன. பெருந்தொகையான நிதி தேவைப்பட்டதனாலேயே அந்த வேளையில் இத்திட்டம் செயல்படமுடியவில்லை எனக்குறிப்பிட்டார்.

---

## சந்தேகத்தில் மூவர் கைது

சுன்னாகம், [illegible]ள்ளி

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் இரதோற்சவ [illegible] சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற மூவரைப் பொலி[illegible] கைது செய்தனர். இதில் [illegible] இருவர்

காவேரி தண்ணீர் பங்கீடு

## மைசூர், கேரளம், தமிழ்நாடு முதல்வர்கள் சந்திக்கிறார்கள்

புதுடில்லி, ஏப் 17

காவேரி தண்ணீர் பங்கீடு சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக தமிழ்நாடு, கேரளம், மைசூர் ஆகியராஜ்யங்களைச் சேர்ந்த முலமைச்சர்கள் மூவரும்புதுடில்லிக்கு வந்திருக்கிறார்கள்

மத்திய நீர்ப்பாசன இலாகா அமைச்சர் டாக்டர் கே. எல். ராவின் முன்னிலையில் இந்தப்பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

காவேரி ஆற்றின்தண்ணீர் பங்கீடு சம்பந்தமாக கேரளத்திற்கும் தமிழ்நாட்டிற்குமிடையில் ஏற்கனவே ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது.

தமிழ் நாட்டிற்கும் மைசூருக்குமிடையிலேயே இப்பொழுது பிரச்னை பெரிதாகவிருக்கின்றது. மைசூரில் உற்பத்தியாகி தமிழ்நாட்டில்பாயும் காவேரி ஆற்றில் மைசூர் அரசு இரண்டு அணைச்கட்டுகளை ஏற்படுத்தி வருகின்றது. இந்தஅணைகளின் காரணமாக தமிழ்நாடு விவசாயிகள்பெரிதும் பாதிக்கப்படுவார்கள்என்று தமிழ்நாடு புகார் தெரிவித்திருக்கின்றது. இந்த அணைகளை கட்டவேண்டாமென்று மத்திய அரசும் மைசூர் அரசும் உத்தரவு பிறப்பித்தது ஆனால் மைசூர் அரசு இந்த எதிர்ப்புக்கள் எதையும் பொருட்படுத்தாமல் அணைகளைத் தொடர்ந்து கட்டி வருகின்றது. இதன் காரணமாக காவேரி ஆற்றின் தண்ணீரினால் பயன் பெறும் ராஜ்யங்களான மைசூர், கேரளம், தமிழ்நாடு ஆகிய மூன்றின் முதலமைச்சர்களையும் ஒரு மாநாட்டிற்கு வரும்படி மத்தியஅரசுகேட்டுக்கொண்டதை ஏற்றுக்கொண்டுஅவர்கள்புதுடில்லி வந்திருக்கிறார்கள்.

## பெருந்துறைத் தொகுதியில் தி. மு. க. வேட்பாளர் வெற்றி

சென்னை, ஏப்ரல் 17

தமிழ்நாட்டில் பெருந்துறைத் தொகுதியில் நடைபெற்ற உப-தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் திரு சென்னியப்பன் வெற்றிபெற்றிருக்கிறார்.

பெருந்துறைத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் உறுப்பினர் திரு. சண்முகசுந்தரம் மரணமடைந்ததால் இந்த உப தேர்தல் நடைபெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. சென்னியப்பனும், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. பெரியசாமியும், சுயேட்சையாளர்கவி இருவரும் இந்த உப-தேர்தலில் போட்டியிட்டார்கள் வாக்குப்பதிவு 15ந் திகதி. நடைபெற்றது.

பெருந்துறைத் தொகுதியில்வெற்றிபெற்றுள்ள திரு சென்னியப்பனுக்கு 45,625 வாக்குகள் கிடைத்தன. சோஷலிஸ்ட் கட்சி வேட்பாளர் திரு. சண்முகசுந்தரம் 32,901 வாக்குகள் பெற்றார்.

இந்த உப-தேர்தலில் சின்டிகேட் காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ், போன்றவை தி. மு. க. வேட்பாளருக்கு எதிராக வேலைசெய்தன. இதனால் போட்டி கடுமையாக இருந்தது. சுயேட்சையாளர்கள் இருவரும் பிணைப்பணத்தை இழந்தனர்.

### ஆஸ்பத்திரியில் அமைச்சர்

சென்னை, ஏப்ரல் 18

தொண்டையில் சதைவளர்ந்துள்ளதால் அறுவைசிகிச்சை செய்வதற்காக அமைச்சர் திரு. வேழவேந்தன் சென்னை பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். டாக்டர் சத்தியநாராயணு இவ்அறுவைச் சிகிச்சையை செய்கிறார். இவரை சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று பார்த்தனர்.

---

### இசையாசிரியர் புத்தூக்க வகுப்பு

யாழ்ப்பாணம், சனி

இசையாசிரியர் புத்தூக்க வகுப்பு கோப்பாய் மகளிர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இம்மாதம் 24ம் திகதி வடபிராந்திய வித்யாதிபதி திரு. எஸ் தணிகாசலம் தலைமையில் இருநாட்கள்

## "ஈழத்தமிழினத்தின் ஒற்றுமைக்கு திருமலையில் பல்கலைக்கழகம் அமைய வேண்டும்"

— வி. தர்மலிங்கம்

## குருடர் சங்கத் தலைவருக்கு

## 'யு.என்.பி முஸ்லிம்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்ற கருத்து வலுப் பெற்றுவரும் இந்தவேளை யில் கம்போடியா பிரச்னை ழுது மீண்டும் வியட்னும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகியிருப்பதால் தாக பீகிங்கில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவித் திருக்கிறூர்

# குருடர் சங்கத் தலைவருக்கு சர்வதேசப் பரிசு

லண்டன், ஏப். 17

குருடர்களுக்கானரோயல் சாம்ராஜ்ய சங்கத்தின் தலைவரும், ஸ்தாபக அங்கத்தவருமான திரு. ஜோன் வில்சனுக்கு ஹெலன் கெல்லர் சர்வதேசப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. சர்வதேச ரீதியில் குருடர்களின் நிவாரணத்திற்கு அவர் ஆற்றிய அருந்தொண்டை கௌரவித்தே இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

12 வயதில்விபத்து காரணமாக குருடரான திரு. வில்சன், குருடர்களுக்கான வொர்ஸெஸ்டர் கல்லூரியிலும் ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையிலும் கல்வி பயின்றவர். இவரது சிபார்சின் பேரிலேயே குருடர்களுக்கான சாம்ராஜ்ய சங்கம் 1950-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை இச்சங்கத்தின் தலைவராக கடமையாற்றி வரும் திரு. வில்சன் உலகடங்கிலும் 400,000 மைல்கள்வரை சுற்றுப்பிரயாணம் செய்துள்ளார். மேற்படி சங்கம் இலங்கை உட்பட 34 சாம்ராஜ்ய நாடுகளிலுள்ள 6,000,000 குருடர்களுக்குசேவையற்றிவருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னரே பிரதம மந்திரி

காட்மாண்ட், ஏப். 17

நேபாளத்தில் பிரதம மந்திரியாக இருந்த திரு. கீர்த்தி நிதி பிஸ்டா தமது பாராளுமன்ற அங்கத்தவர் பதவி காலாவதியாவதால் தமது பதவியை ராஜினுமா செய்துவிட்டார். அவருடைய ராஜினுமாவை ஏற்று 9 மந்திரிகள் கொண்ட புது மந்திரிசபையை தற்காலிகமாக நேபாள மன்னர் மகேந்திரர் கூட்டியுள்ளார்.

இந்த மந்திரிசபையில் 5 பேர் புதிய மந்திரிகள். 3 பேர் பழைய மந்திரிசபையில் இருந்தவர்கள்.

தற்போது பாராளுமன்றத்தில் காலியாகவுள்ள 30 ஸ்தானங்களுக்கு அடுத்த மாதம் தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தல் முடியும்வரை மன்னர் பிரதம மந்திரியாக இருப்பார்.

## 'யு.என்.பி முஸ்லிம்களை ஏமாற்றுகிறது'

பெரதேனியா, வெள்ளி

'முஸ்லீம்மக்கள் தங்களைக் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது கூட்டணியினரிடமிருந்தல்ல, ஐ தே. கட்சியிடமிருந்தே. அரபு உலகை அழிப்பதற்கு இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் கொடுத்துவரும் அமெரிக்கருடன், ஐ. தே. கட்சியினர் தொடர்பு கொண்டவர்கள். பதினெருவருட காலமாக முஸ்லீம்களை இவர்கள் ஏமாற்றி வருகின்றனர். இவர்களைவிட, அதிகமாக முஸ்லீம் மக்களுக்கு பண்டாரநாயக்கா அரசாங்கம் நன்மைகள் செய்திருக்கிறது' என்று இஸ்லாமிய சோஷலிச முன்னணியின் தலைவர் திரு. பதியுதீன் முகமத், உடுநுவரையில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு ரி. பி. ஜயசுந்தராவை ஆதரித்து புவலிகெடவில் நடந்த கூட்டத்தில் பேசும் பொழுது சொன்னூர்.

...ப்பட்டார்.

எதிர்க்கட்சிகளின் மகாவலி பற்றியகண்டனங்களுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் உலகவங்கியிடம் கடனை நாங்கள் முதன்முதலாகப்பெறவில்லை. திரு. பண்டாரநாயக்கா, திருமதி பண்டாரநாயக்கா ஆகியோரது ஆட்சிக்காலத்திலேயும் அவர்கள் உலக வங்கிக் கடனைப்பெற முயற்சித்தமையை எதிர்க்கட்சியினர் மறந்துவிடலாமா எனக் கேட்டார்.

## ஈராக் அன்பளிப்பு

கோட்டை, வெள்ளி

ஈராக் இலங்கைக்கு ஒரு கப்பல் நிறைந்த பேரீச்சம் பழங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவே இந்த அன்பளிப்பு வழங்கப்படுகிறது. 25000 இருத்தல் நிறையுள்ள இந்த பழங்களை இவ்வார முடிவுக்குள் இலங்கையிலுள்ள ஈராக் அரசாங்க வர்த்தக நிலைய அதிபர் திரு. பருக் இலங்கை அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிப்பார்.

சுன்னுகம், வெள்ளி

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் இரதோற்சவ தினத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற மூவரைப் பொலிஸார் கைது செய்தனர். இதில் இருவர் வவனியாவைச் சேர்ந்தவர்களாம். கைதுசெய்யப்பட்ட மூவரையும் ஆனைக்கோட்டைப் பொலிசார் காவலில் வைத்துள்ளனர். அடியார் ஒருவருடைய சங்கிலி திருடப்பட்டதை அடுத்தே பொலிசார் பிரஸ்தாப நபர்களைச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்தனர்.

## இடமாற்றம்

சித்தன்கேணி, வெள்ளி

சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூகநிலையத்தின் தலைவராகப் பல வருடங்கள் கடமையாற்றியவரும், ஓவியரும், கலைஞரும், தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலய ஆசிரியருமான திரு. ஆ. சதாசிவம் (கலைமாணி) கடந்த மாதம் 23ந் திகதி தொடக்கம் யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். சமூகத் தொண்டரான இவர், நாடகத் துறையில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்.

இசையாசிரியர் புத்தூக்க வகுப்பு கோப்பாய் மகளிர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இம்மாதம் 24ம் திகதி வடபிராந்திய வித்யாதிபதி திரு. எஸ் தணிகாசலம் தலைமையில் இருநாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

கர்நாடக இசை 'சாகித்தியமும் வர்ணமெட்டும்; 'சிலம்பின இசை' 'இசையும் இறைவனும்' சங்கீத சம்பிரதாயம் போன்ற விரிவுரைச் சொற்பொழிவுகளும் இடம்பெற விருக்கிறது. ஈழநாட்டில் இசை வளர்ச்சி, திருமுறைகளும் நாயனமார்களும். சங்கீத ஆரம்பபாடங்களின் அத்தியாவசியம், இசைப் பண்பாடும் அடியார்கள், தமிழோடிசைபாடல் போன்ற விடயங்கள்தொடர்ந்து இம்மாதம் 26ந்திகதி வரை நடைபெறும்.

இலங்கையிலிள்ள கர்நாடக சங்கீத ஆசிரியர்கள் எல்லோடும் பங்குபற்றுவார்கள், இசையாரியர்கள் தவறுது புத்தூக்க வகுப்பில் பங்குபற்றுமாறு சங்கீதவித்தியாதரிசினி ஸ்ரீமதி எஸ். வேலாயுதபிள்ளை மட்டக்களப்பு திருகோணமலை, மூதூர், மன்னூர் பகுதி ஈருக நிகழ்ச்சிநிரல்அனுப்பி பங்குபற்றும்படி கேட்டுள்ளார்.

(கு. வி. ம.)

## "திருமலையில் பல்கலைக்கழகம் அமைய வேண்டும்"

-- வி. தர்மலிங்கம்

தாவடி, வெள்ளி

"ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களை ஒற்றுமைப்படுத்தி, வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழின மக்கள் யாபேரையும் ஐக்கியப்படுத்தி வாழவழி கோலுவதாக அமையக் கூடியது திருக்கோணமலையில் பல்கலைக்கழகத்தை நிறுவுவது. திருக்கோணமலை தமிழர் வாழ்ந்த புண்ணிய பூமி, அதிலும் முக்கியமாக தமிழினம் வாழ்கின்ற பிரதேசங்கள் யாவற்றிற்கும் மத்திய ஸ்தாபனமாக அமைந்திருக்கின்றது."

இவ்வாறு, இணுவில் மத்திய சந்தை மைதானத்தில் உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னுள் உடுவில் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"திருக்கோணமலையிலே பல்கலைக்கழகம் அமைந்தால் யாழ்ப்பாணத்து மக்களுக்கு கஷ்டமாக இருக்கும் என்று நாம் கருதக் கூடாது. இலங்கைவாழ் தமிழினம் ஒற்றுமைப்பட்டு வாழ விரும்புவோமேயாகில் கஷ்டங்களைப் பொருட்படுத்தாது, திருக்கோணமலையில் பல்கலைக்கழகம் அமைப்பதை வரவேற்கவேண்டும். காலியில் ஒரு பல்கலைக்கழகம் அமைவதற்குமுன் யாழ்ப்பாணத்திலோ அல்லது திருக்கோணமலையிலோ பல்கலைக்கழகம் அமையமாட்டாது. யாழ்ப்பாணத்திலே பல்கலைக்கழகம் நிறுவச் சம்மதமானதாக பல்கலைக்கழக கமிஷனின் அறிக்கை இருந்தாலும் நிறைவேற மாட்டாது.

தமிழினத்தைத் தமிழரசுக்கட்சி காட்டிக் கொடுத்ததா? இல்லை! 1961-ம் ஆண்டு தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகம் செய்திராவிட்டால் இன்று வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் சிங்களம்தான் உத்தியோக மொழியாக இருந்திருக்கும். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே சிங்கள மொழியுடன் சமமாகவே தமிழும் நடைமுறையில் கொள்ளப்படுகின்றது. இப்போது, இதை தமிழ் மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும்."

இக் கூட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதி முன்னுள் எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், உடுப்பிட்டித் தொகுதி தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. க. ஜெயக்கொடி உட்படப் பலர் உரையாற்றினர்.

# அமெரிக்காவின் விண்வெளியில் மிதக்கும் 'ஓடம்'

நியூயோர்க், ஏப். 17


அப்பலோ-13 கலத்தின் சந்திரப்பயணம் தோல்வியடைந்த போதிலும் 'நாஸா' மேற்கொள்ளவிருக்கும் இதர விண் பயணங்கள் யாவும் திட்டமிட்டபடி நிறைவேறும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்படி 1978-ம் ஆண்டு வாக்கில் விண்வெளியில் மிதக்கப் படவிருக்கும் விண்வெளி ஓடம் அல்லது மேடையின் படம் இங்கு காணப்படுகின்றது.

'விண்வெளி ஓடம்' பற்றி வரும் ஆண்டுகளில் நிறைய அறியக்கூடியதாய் இருக்கும் அமெரிக்காவின்புதிய திட்டம் இது மிகக் குறைந்த செலவில் விண்வெளியில் போக்குவரத்து அமைப்பு ஒன்றை 1978 வாக்கில் உருவாக்கும் திட்டம்.

விண்வெளி ஓடம் என்பது இறக்கைகள் உள்ள ஏவுகணையாகும். விண்வெளியை நோக்கி இது செங்குத்தாகக் கிளம்பும். திரும்ப விமான நிலையத்தில் ஒரு விமானம் போன்றே வந்திறங்கும். அதனைப் புதுப்பித்து எரிபொருள்கள் அடைத்து மீண்டும் விண்வெளிக்குக் கிளம்பச் செய்யலாம். இவ்வாறு ஒரே ஏவுகணையை 100 தடவை பயன்படுத்தலாம்.

இப்பொழுது அமெரிக்க விண்வெளித் திட்டத்தில் பயன்படும் ஏவுகணைகளில் ஸட்டர்ன் என்ற அம்புலி ஏவுகணை தவிர மற்ற எல்லா ஏவுகணைகளுக்கும் பதிலாக இனி இந்த விண்வெளி ஓடமே புழக்கத்துக்கு வரும்.

மற்றும்பல புதிய வேலைகளுக்கும் விண்வெளி ஓடம் பயன்படும். பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கும் விண்வெளி மேடைக்கு விண்வெளி விமானிகளையும் விஞ்ஞானிகளையும் வேண்டிய சாமான்களையும் கொண்டு சேர்ப்பது, பழுதாகிவிட்ட செயற்கைக் கோள்களைப் பழுதுபார்ப்பது, அவற்றை மாற்றிவிடுவது முதலியன இப்புது வேலைகள். இவை



யெல்லாம் இனிமேல் தான் நடக்கவேண்டும்.

பூமியின் வளங்களை ஆராயும் செயற்கைக் கோள்கள் பூமியை அதன் சுழற்சி வேகத்திலேயே வலம் வரத்தக்க உயரமான இலங்கை அடைவதற்கு இடையில் விண்வெளி மேடையாக இருந்து அவற்றை மேலே செலுத்தி வைப்பதற்கும் விண்வெளி ஓடத்தைப்பயன்படுத்தலாம். அதே போல் செவ்வாய் முதலில் விண் கோள்களை ஆராயும் விண்வெளிக் கலங்களைமேலே அனுப்பிவைப்பதற்கும் விண்வெளி ஓடம் விண்வெளி மேடையாகப் பயன்படக் கூடும்.

இப்பொழுதுள்ள திட்டப்படி இந்த ஓடம் இரண்டு கட்டங்களை உள்ள ஏவுகணையாக இருக்கும். உயரம் 30 மாடிக் கட்டடத்தின் அளவு. எடை 26 லட்சம் கிலோ. (அம்புலிக்கு அப்பாலோ கப்பலைச் செலுத்தும் ஸட்டர்ன்-5 ஏவுகணையின் உயரம் 36 மாடிக் கட்டடத்தின் அளவு, எடை 52 லட்சம் கிலோ) ஓடத்தினை இயக்குவது ஹைட்ரஜன் எரிபொருளாக உள்ள ஏவுகணைக்கொத்துகளாகும்.

விண்வெளி ஓடத்தில் 25 மாடிக் கட்டடத்தின் உயரமுள்ள முதல் கட்டத்தின் மேல் 24 மீட்டர் உயரத்துக்கு அமர்ந்து செல்லும் பகுதிதான் விண்வெளியில் பூமியை வலம்வரக் கூடியது. அதனுள் ஒரு பெரிய கூடம் இருக்கிறது. இக் கூடத்தில் 23,000 கிலோ எடையுள்ள சாமான்கள், ஆள்கள் இருந்து செல்லலாம்.

முதல் கட்டம் உடனே பூமிக்கு மீண்டுவிடும். மேல் பகுதி விண்வெளியில் தன் வேலைமுடிந்தபின் எப்போது வேண்டுமானுலும் அங்கிருந்து திரும்ப முடியும்.

1972-ம் ஆண்டில் 'ஆர்பிட்டல் வேர்க்ஷாப்' என்று கூறப்படும் விண்வெளிப் பட்டறை ஒன்று செலுத்தப்படும். விண்வெளி விமானிகளுக்குத் தளமாக இயங்கக் கூடிய விண்வெளி நிலையங்கள் செலுத்தப்படும். இந்த நிலையங்களிலே ஓராண்டுக்கு மேலாக விண்வெளி விமானிகள் மருத்துவம். வானியல் முதலியவற்றில் விரிவான ஆராய்ச்சி நடத்துவதோடு, விண்வெளியில் பல பொருள்களைத் தயாரித்தும் பார்ப்பர்; பூமியின் வளங்களைக் கண்டறியவும் முயலுவர். ஒன்றுக்குப் பின் ஒன்ருகப் பல விண்வெளி விமானிகளின் குழுக்கள் இந்த நிலையங்களுக்குச் சென்று பணியாற்றும்.

## படுகொலை இருவர் கைது

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சி தொகுதியில் 50 வயதான மாடாசாமி என்பவர் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டார்.

திடீரென ஏற்பட்ட தகராறே இக்கொலைக்கு காரணமென்று, பொலிஸ்விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இக்கொலை சம்பந்தமாக, சந்தேகநபரான சின்னச்சாமி கந்தசாமி என்பவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸார் தொடர்ந்து புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இன்னல்கள் நேருகின்றன. ஆனால் அவை என்றும் இருப்பதில்லை. பாலத்தின் அடியில் ஓடும் நீரைப் போல் அவை ஓடிமறைந்துவிடும்.

— அன்னை சாரதாமணி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 5-ந் திகதி (18-4-70)


## புரட்சி முயற்சி

ஜனநாயக வாழ்க்கை அமைப்பு முறையை ஒழித்துக்கட்டி, வேறுவிதமானதோர் அரசியல் அமைப்பை இங்கு ஏற்படுத்தும் நோக்கத்துடன் புரட்சியொன்றை இங்கு உருவாக்குவதற்கு சிலர் முயற்சிசெய்ததாகவும் இந்த முயற்சி கண்டுபிடிக்கப்பட்டுள்ளபோதிலும் எச்சமயத்திலும் இந்த முயற்சியில் வெற்றிபெறுவதற்கு அவர்கள் முன்வரலாம் என்ற அச்சம் பொலிஸ் பகுதியில் நிலவுகிறது. பொலிஸ் அதிபர் திரு ஸ்டான்லி அபயகுணவர்த்தனு பத்திரிகைநிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்த கருத்திலிருந்து இது தெளிவாகிறது.

தேர்தல்காலங்களில் அவிட்டுவிடப்படும் சில புரளிகளில் இந்தப் புரட்சியும் ஒன்று எனச் சிலர் சமாதானம் சொல்லக்கூடும். புரட்சி முயற்சிபற்றிப் பல மாதங்களுக்கு முன்னரே தகவல் கிடைத்திருந்தால் அல்லது சில வாரங்களுக்கு முன்னரேதானும் தகவல் கிடைத்திருந்தால் சந்தேகப்பதமானவர்கள்மீது பொலிசார் ஏன் நடவடிக்கை எடுத்திருக்கக்கூடாது? பல மாதங்களுக்கு முன்னரே இதுபற்றித் தங்களுக்குத் தகவல் கிடைத்தது என்று பொலிஸ் அதிபர் கூறியிருக்கிறார். பல மாதங்களுக்கு முன்னர் இதுபற்றித் தெரிந்திருந்தால் பிரதமருக்குத் தெரிவித்து மகா தேசாதிபதி மூலம் அவசரகாலநிலைமையைப்பிரகடனம் செய்து (ஆட்சிமன்றம் கலைக்கப்படு முன்னரே) சந்தேக நபர்களைக் கைதுசெய்து அரசாங்கத்தைக் கவிழ்க்க சதிசெய்ததாகக் குற்றம் சாட்டி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருக்கலாம் பொலிசார் இதை ஏன் செய்யவில்லை. துப்பறியும் சக்தி இலங்கைப் பொலிசாருக்கு குறைவா?

இலங்கை அன்னியராட்சியிலிருந்து விடுதலைபெற்று இருபத்திரெண்டு ஆண்டுகளாகின்றன. விடுதலையடைந்ததுமே ஜனநாயக அரசியல் அமைப்பு முறையையே பின்பற்றிவருகிறது. இந்த இருபத்திரெண்டு ஆண்டுகளுக்கிடையில் 1962-ம் ஆண்டில் அதாவது திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் ஆட்சிபீடத்தில் இருந்த சமயத்திலும் 1966ம் ஆண்டில் அதாவது திரு. டட்லி சேனநாயகா அரசாங்கம் ஆட்சிபீடத்தில் இருந்த சமயத்திலும் இரண்டு புரட்சி சதிமுயற்சி நடைபெற்றதாக வழக்குத் தொடரப்பட்டு விசாரணையும் நடைபெற்றிருக்கிறது.

இப்பொழுது நடைபெற்றுள்ளதாகக் கருதப்படும் புரட்சி முயற்சி மூன்றாவதாகக் கருதப்படவேண்டும். அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கோ அரசியல் அமைப்பு முறையை மாற்றியமைப்பதற்கோ இந்த முயற்சி நடைபெற்றதென்பது பற்றித் தெளிவாகச் சொல்ல முடியாது.

ஆனாலும் இந்த முயற்சிகள் ஏன் நடைபெறவேண்டும்; முயற்சி நடைபெற்றதாக செய்திகள் ஏன் வெளிவரவேண்டும்? அரசியல் அமைப்பில் குறைபாடா, ஆட்சிபீடத்திலமர்ந்தவர்களின் குறைபாடா, நாட்டின் ஆட்சி நிர்வாகத்திலுள்ள சீர்கேடா?

புரட்சி முயற்சியிலீடுபட்டவர்களென்று சிலரைப் பிடித்து விசாரணைசெய்தால் மட்டும் போதாது, அடிப்படைக் கோளாறு என்னவென்பதை ஆராய்ந்து அதற்கு நிவர்த்தி காணவேண்டியது அவசியம்.

# 'சாதி, மத வெறிகளைக்

# 'துப்பாக்கி வெடித்தது; செல்வம்சுருண்டுவிழுந்தான்'

## நாவற்குழிகொலைவழக்கில் சாட்சியம்

மட்டுவில், சனி

'மண்டா, வாள், கத்தி, பொல்லு சகிதம் எம்மை நோக்கிவந்தவர்கள், வாருங்கோடா சண்டைக்கென்று எம்மை அழைத்தனர். நாமும் வயலினுள் சண்டைக்குத் தயாரானோம். அப்பொழுது ஐந்தாம் எதிரி துப்பாக்கியுடன் முன்னேறினார், அது கண்ட மரியதாஸ் துவக்கடா அண்ணை என்றான், நாங்கள் திரும்பியோட முன் துப்பாக்கி வெடித்ததும், செல்வம் சுருண்டு விழுந்தான்.'

நாவற்குளி துப்பாக்கிச் சூட்டுக் கொலைவழக்கில் சாட்சியமளித்த ஞானப்பிரகாசம் மேரி யோசப் மேற்கண்டவாறு சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் கூறினார்

இவ்வழக்கில் அதே ஊரைச் சேர்ந்த நாகமுத்து மார்க்கண்டு, சடையன் இரத்தினம், சின்னையா நவரத்தினம், இளையவன் கதிரன் அல்லது சின்னத்துரை, கதிரன் தம்பிராஜா ஆகியோர் மானிப்பாயைச் சேர்ந்த செல்வம் என்ற வாலிபரை துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாக சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சாவகச்சேரி நீதவான் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட இந்த வழக்கில், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். பி. மயில்வாகனம் அனுசரணையுடன் அட்வகேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். கே. திரவியநாயகம் அனுசரணையுடன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. என் கதிர்காமநாதன் ஆஜரானார் விசாரணையின்போது சாட்சி ஞானப்பிரகாசம் மேரி யோசவ் தொடர்ந்து கூறியதாவது:-

சம்பவதினம் நானும் அம்மாவும், சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டின் பேரில் விளக்கம் சம்பந்தமாக வந்திருந்தோம். அப்பொழுது பொலிஸ் விளக்கத்திற்கு மறுதரப்பினர் வராமையின் காரணமாக விளக்கம் நடைபெறவில்லை. நானும் அம்மாவும் பஸ்ஸில் ஏறி நாவற்குழியிலுள்ள வீட்டிற்குத் திரும்பினோம். அப்பொழுது துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி இறந்த செல்வம் என்பவர் பஸ்ஸில் இருந்தார். நானும் அவரும் நட்பாய் இருந்தோம். நான் கல்யாணம் செய்தபின் என் குடும்பத் தொழிலில் ஈடுபட்டதன் காரணமாக அவரைச்சந்திப்பதில்லை. அன்று அவர் நாவற்குழிக்கு யாரோ சொந்தக்காரரிடம் வந்திருந்தார். அவரும் என்னுடன் கூடிக்கொண்டுவந்தார் பகல் மணி 12 இருக்கும். நாங்கள் எங்கள் தாயார் வீட்டிற்குப்போயிருந்தோம்

அப்பொழுது முதலாம் எதிரி வாடுங்கோடா சண்டித்தனத்திற்குஎன்று சவால் விட்டார். அவர் அப்பொழுது எதிரிலுள்ள ஒரு பனந்தோப்பிற்குள் நின்றார். இவர்கள் சண்டித்தனத்திற்கு வரும்படி அழைத்தபோது, நான் வெளியில் போகவில்லை. பின் அவர் வீட்டிற்குமுன் வயற்கரைக்கு வரும்படி பின்பும் அழைத்தார். அப்பொழுது அவர்கள் கையில் மண்டா, வாள், பொல்லு ஆகியன இருந்தன

இககட்டத்தில் நீதவான் வழக்கை மறு திகதிககு ஒத்திவைத்தார்

— —

## சஞ்சிகை வெளியீட்டு விழா

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணைக்கிராம இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட "தமிழமுது" என்ற மாதப் பத்திரிகையின் "வெளியீட்டு விழா" சரவணை கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் நேற்று மாலை முன்தினம் நடைபெற்றது.

வித்துவான் திரு. சு. இ. பொன்னையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இரசிகமணி கனக செந்திநாதன் "ஈழநாட்டுப்பத்திரிகைகள்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். சஞ்சிகையை சரவணை மகேசன் அறிமுகம் செய்துவைத்தார்.

திரு. ஏ. ரி. பொன்னுத்துரை, திரு. பி. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

கவிஞர் இ. நாகராஜன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் வி. கந்தவனம், காரை. செ. சுந்தரம்பிள்ளை, ... சாமி, ... சு. மகா... சிவம் பா. சிவ...

# கிழக்கு மாகாணத்தில் காங்கிரஸ் போட்டியிடாதது ஏன்?

## ஜி. ஜி. கூறும் விளக்கம்

உடுப்பிட்டி, வெள்ளி

கிழக்கு மாகாணத்தில் எனது சுகவீனத்தாலேயே அபேட்சகர்களைத் தமிழ்க் காங்கிரஸ் நிறுத்தவில்லை. நான் அங்கு சென்று பேச முடியாததாலேயே வடமாகாணத்துடன் நிற்கின்றோம்.

இவ்வாறு தமிழ்க காங்கிரஸ் தலைவரும் முன்னாள் யாழ்ப்பாண எம். பி. யுமான திரு. ஜி ஜி பொன்னம்பலம் அல்வாய் மாலிசந்திப்பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்

திரு. சிவசிதம்பரத்தை ஆதரித்து நடைபெற்ற இக கூட்டம் இளைப்பாறிய ஆசிரியர் திரு. கே கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது, திரு. பொன்னம்பலம் தொடர்ந்து கூறியதாவது:-

'தமிழினத்தின் கட்சி வேறுபாடுகளினால் தமிழ்மககளின் கௌரவம் வரவரக குறைந்தது இப்போது இரண்டாந்தரப் பிரஜைகளாகவே தமிழினம் வாழுகிறது. 1948-ம் ஆண்டு முதல் 1956-ம் ஆண்டு வரை நான் மந்திரிசபையில் இருந்தபொழுது தமிழுககும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்து இருககவில்லையா?

1956-ம் ஆண்டு முதல் மொழிகா உயிர் விடுவதாகவும், மலையகத் தமிழரின் உரிமைகளைப் பெற்றுக கொடுககப்போவதாகவும் சொன்னார்கள். ஆனால் யாழ்ப்பாணக கச்சேரியில் பைல்கள் யாவும் சிங்களத்தில்தான் இருககின்றன என்பதை எவரும் மறுககமுடியாது

7 வருடம் தொடர்ந்து இலங்கையில் வாழ்ந்த விவாகம் செய்த மலையகத் தமிழருககுப் பிரஜாவுரிமையும், 10 வருடம் இலங்கையில் தொடர்ந்து வாழ்ந்தவர்களுககுப் பிரஜாவுரிமையும் எனது திட்டத்தினாலேயே கிடைத்தன. 65-ல் தமிழரசுககட்சியினர் சாஸ்திரி—ஸ்ரீமா ஒப்பந்தத்தின் மூலம் 5 லட்சம்மலையகத்தமிழரை நாடு கடத்த ஒப்புககொண்டனர். 1948-ல் எனது ஒப்பந்தப்படி ஒரு மலையகத் தமிழரையும் வெளியேற்ற முடியாது. எமது மொழியுரிமையையும். மலைநாட்டுத் தமி...

...ஏற்றுககொளவதாக ஹொரகொல்லையில் கையெழுத்து இட்டார். ஆட்சிமன்றத்திலும் முரண்பாடாகப் பேசுவது அவர்கள் வழக்கம்

1958-ம் ஆண்டு கலவரத்தில் அடிவாங்கி, பொருள் இழந்து, மானமிழந்து, உடுத்த உடுப்புடன் தென்னிலங்கையிலிருந்து இங்கு வந்தோம். ஒருமாதத்தின் பின் எல்லோரும் திரும்பிச் சென்றோம். இந்த மாகாணத்தில் பொருளாதாரம் காணாது என்பதாலேயே மீண்டும் எமது உயிரையும் மதியாது சிங்களப்பகுதிகளுக்குச் செல்கின்றோம்.

முன்னாள் உடுப்பிட்டி எம். பி. திரு. எம் சிவசிதம்பரம் பேசுகையில் சொன்னதாவது:

நாம் ஆங்கில மோகங்கொண்டு அந்நியமொழிகளை நாடியபோது ஆசிரியர்கள் தான் தமிழைக் காப்பாற்றினர். சுந்தரலிங்கம், பொன்னம்பலம், செல்வநாயகம் ஆகியோரைக் கொண்ட ஒரு கூட்டத்தில் முன்னாள் ஆசிரியர் சங்கத் தலைவரான பண்டிதர் ஒருவர் மூன்று தலைவர்களின் கால்களிலும் தனது கௌரவத்தையும் பதவியையும் மறந்து விழுந்து தமிழினத்துக்காக ஒற்றுமையாகுங்கள் என்று விடுத்த வேண்டுகோளை எவரும் மறந்திருக்கமுடியாது.

தலைவர்கள் ஒன்றுபட்டால்தான் மொழி அந்தஸ்தை நிலைநாட்டலாம். நாம் ஆட்சிமன்றத்திற்குச் செல்வதற்காக ஒற்றுமை கேட்கவில்லை எமது கோரிக்கைகளை ஒருமனதாகச் சமர்ப்பிக்கவே ஒற்றுமையாகுமாறு கேட்கிறோம்.

தேர்தலுக்குமுன் டட்லி யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவுவோம் என்று கூறிவிட்டாலும் தேர்தல் முடிந்தபின்பு கட்டாயம் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம்நிறுவியே தீருவோம்.

திருவாளர்கள் ஆனந்தசங்கரி ஐ. வரதராசன், எஸ். விநாயகமூர்த்தி, மு வல்லிபுரம், சரவணமுத்து, சிவநேசன், ஸ்ரீதரன் ஆகியோரும் பேசினர்.

அன்று காலை நெல்லியடி மகாத்மா படமாளிகையில் இருந்து திரு. சிவசிதம்பரம் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் உடுப்பிட்டித்தொகுதியின் பிரதான பாதைகள் ஊடாக நடைபெற்றது.

# மே தினக் கூட்டங்களில் அரசியல் பிரச்சாரம்

## பிரமாண்டமான ஊர்வலங்கள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் இத்தடவை மே தினக் கூட்டங்களை தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்துவதற்கான முயற்சியில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

இம்மாதம் 23-ம் திகதியுடன் ஊர்வலங்களுக்கு தடைபோடப் பட்டிருப்பதால் மே தினத்தன்று பிரமாண்டமான ஊர்வலங்களை நடாத்த அரசியல் கட்சிகளின் கீழ் இயங்கும் தொழிற்சங்கங்கள் ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

மே தினத்தன்று பல்வேறு தொழிற் சங்கங்கள்போட்டி போட்டுக்கொண்டு ஊர்வலம் நடாத்தவிருப்பதால் பொலிஸ் பகுதியினர் அதற்கான ஒழுங்குகளை செய்து வருகின்றனர்.

சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் கீழ் இயங்கும் ... ஊர்வலத்தை நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

தமிழரசு கட்சியின் கீழ் இயங்கும் இலங்கை தொழிலாளர் கழகம், பஸ் தொழிலாளர் கழகம், மற்றும் தொழிற்சங்கங்களும் மாட்டு வண்டிகள், சைக்கில்கள், டிராக்டர்கள் கொண்ட ஒரு ஊர்வலத்தை நடத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

தமிழ் காங்கிரஸின் கீழ் இயங்கும் தொழிற் சங்கங்கள் இரு ஊர்வலத்தை நடாத்துவதற்கான ஒழுங்குகளை செய்து வருகின்றனர்.

கூட்டாட்சி கட்சியினரும் ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் நடாத்துவதற்கான ஒழுங்குகளை செய்துள்ளார்கள்.

ஊர்வலங்களில் அசம்பாவிதங்கள் ...

## நாட்டிலும் நகரிலும்

சங்கீத பூபதி மஹாராஜபுரம் விஸ்வநாத ஐயரின் மறைவுடன் இந்த நூற்றுண்டில் சிறந்து விளங்கிய கர்நாடக சங்கீத வித்வான்களில் இன்னுமொரு 'காய்' போய்விட்டது.

விஸ்வநாதர், தியாகராஜ சுவாமிகளின் நேரடியான சீட பரம்பரையில் வந்தவர். ராகப் பாடுவதிலும், கற்பன ஸ்வரம் பாடுவதிலும் அவருடைய பாணியை எவரும் இதுவரை பிற்பற்ற முடியவில்லை மிகவும் துல்லியமான சாரீரத்தில் அவர் போடும் பிர்க்காக்களிலும் சங்கதிகளிலும் கற்பனை கொட்டு கொட்டென்று கொட்டும். தர்பார், ஆரபி, மோஹனம் முதலிய சில ராகங்களை அவர் சிறப்பாக வாலாயம் செய்துகொண்டு அநேகமாக ஒவ்வொரு கச்சேரியிலும் பாடுவார். ஆனாலும் அவை கேட்கக் கேட்கத் தெவிட்டாதவை.

சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு கே. பி. சுந்தராம்பாள் நந்தனாக நடித்த 'பக்த நந்தனார்' படம் வெளிவந்தது. அதில் விஸ்வநாத ஐயர் தான் வேதியராக நடித்தார். பாட்டுகளுக்குச் சொல்லவேண்டுமா? சினிமா தமிழ் நாட்டுக்கு வந்த புதிதில் கர்நாடக சங்கீத வித்வான்களுக்கு அதில் நடிப்பதற்கு ஒரு மோகம் ஏற்பட்டது. முசிரி சுப்பிரமணிய ஐயர், செம்மை வைத்தியநாத பாகவதர், மைசூர் சௌடையா, திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை எல்லோரும் ஒவ்வொரு படத்தில் நடித்திருக்கிறார்கள். ஒவ்வொன்று தான். அதற்குமேல் அவர்கள் சினிமாவின் நினைவை அடியோடு மறந்துவிட்டார்கள்!

மஹாராஜபுரத்தின் இளைய சகோதரர் மஹாராஜபுரம் கிருஷ்ணமூர்த்தி சிறந்த பாடகராகவும், நாடக, சினிமா நடிகராகவும் விளங்கியவர். இளம் வயதில் இறந்துவிட்டார் மஹாராஜபுரம் பரம்பரையில் இன்று சிறந்த சங்கீத வித்வானாக விளங்குகிறார் விஸ்வநாத ஐயரின் புதல்வர் திரு. சந்தானம் சில வருடங்களுக்கு முன்பு-இவர் இராமநாதன் இசைக் கல்லூரியில் பிரின்சிப்பலாய் இருந்தது எல்லோரும் அறிந்த விஷயம்.

0 0 0

ஐரோப்பாவிலும், அமெ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குத் தொடரப்பட்டிருக்கலாம் பொலிசார் இதை ஏன் செய்யவில்லை. துப் என்னவென்பதை ஆராய்ந்து அதற்கு நிவர்த்தி காணவேண்டியது அவசியம்.

# 'சாதி, மத வெறிகளைக் கிள்ளி எறிந்தோம்'

## இறுப்பிட்டியில் பண்டிதர்

அல்லைப்பிட்டி, வெள்ளி

''ஈழத்தமிழகத்தில் தமிழ் பேசும் மக்களிடையே வளர்த்து விடப்பட்டிருந்த பிரதேச, ஜாதி, மத வெறிகளைக் கிள்ளியெறிந்து ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்றதத்துவத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காக தமிழரசுக்கட்சி அலுக்காமல், சளைக்காமல் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாக உழைத்து வருகிறது.''

இவ்வாறு இறுபிட்டியில் நடந்த தமிழரசுககட்சி பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்தார்.

வைத்தியர் திரு. தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இககூட்டத்தில்திரு. இரத்தினம் தொடர்ந்து பேசுகையில், ''ஒரு மொழிவைத்து உலகாண்ட தமிழினம் இன்று சிறுமைப்பட்டு சீர் குன்றி இருப்பதற்கு முக்கியகாரணம் மத, வெறியும், ஜாதி, வெறியுமே! இந்த இரண்டு சாபக்கேடுகளையும் ஒழித்துக்கட்டி தமிழினத்தை ஒற்றுமைப்படுத்துவதிலேதான் தமிழினத்தின் எதிர்காலப் பெருமையும் நல்வாழ்வும் தங்கியிருக்கப் போகிறது. தமிழரசுக்கட்சி 1956-ம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ் பேசும் மக்களை சாதிமத வேறுபாடற்ற தேசிய இனமாக உருவாககி வைத்திருக்கிறது மட்டுமல்லாமல் உருவாக்கியும் வருகிறது. இதனை தமிழ் பேசும் மக்கள் யாவரும் நன்கு அறிவர். எனவே தமிழ் வாககாளர்கள்கொண்ட பத்தொன்பது தொகுதிகளிலும் போட்டியிடும் ஒரேயொரு கட்சி தமிழரசுக்கட்சியாகும் இக்கட்சியை ஆதரிப்பது தான் தமிழினத்தின் நன்மையையும் ஒற்றுமையையும் விரும்பும் நல்லதமிழர்கள் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்'' என்றார்.

இக்கூட்டத்தில் திரு. ச. கதிரவேலு, திரு. க. திருநாவுக்கரசு உட்பட வேறு பலரும் பேசினர்.

---

## இசைவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

நேற்று ஆரம்பமான யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் பத்தொன்பதாண்டு இசைவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் வருமாறு:

மாலை 6-30-7-45 மேளம், திரு. ஏ. எஸ். சின்னராசா, எஸ் ஸ்ரீதரம், (நாதஸ்வரம்) நாச்சிமார் கோவிலடி கே கணேசு. கே. கணேசு, (தவில்) 7 45-8.00 தலைமையுரை யாழ் இந்துக்கல்லூரி அதிபர் என். சபாரத்தினம், 8.00-9.00 பாட்டு, யாழ் ரசிகரஞ்சனசபா மாணவிகள் 9.00 – 10 00 பாட்டு செல்வன் கே. இராமநாதன் வயலின் பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஸ்வரசர்மா, மிருதங்கம், செல்வன் சு. ரகுநாதன் 10 00-11.15 வில்லுப்பாட்டு ''மாங்கனி பெற்றமாதரசி' -திருப்பூங்குடி வி க ஆறுமுகம்


## தேவை

இரவில் பத்திரிகை மடிக்கவும் காலையில் யாழ் மாநகரசபைப் பகுதிக்குள் பத்திரிகை விநியோகம் செய்யவும் பையன்கள் உடனடியாகத் தேவை. சொந்தமாகச் சைக்கிள் வைத்திருப்போர் 18-4-70 சனிக்கிழமை காலை 10 மணிக்குகாரியாலயத்திற்கு வரவும். பொது முகாமையாளர், ஈழநாடு லிமிட்டெட். 2230



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


காரணமாக விளக்கம் நடைபெறவில்லை. நானும் அம்மாவும் பஸ்ஸில் ஏறி நாவற்குழியிலுள்ள வீட்டிற்குத் திரும்பினோம். அப்பொழுது துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி இறந்த செல்வம் என்பவர் பஸ்ஸில் இருந்தார்.

செல்வம்என்பவர் மானிப்பாயைச் சேர்ந்தவர் என் நீண்ட நாள் நண்பன்.

கவிஞர் இ. நாகராஜன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் வி. கந்தவனம், காரை. செ. சுந்தரம்பிள்ளை, கல்வயல் குமாரசாமி, இல்லைச்சிவன், பசுவூர் சுமகன், [illegible]சிவம் பா. சிவகடாட்சம், கவிஞர் கந்தவனம் ஆகியோர் பங்குபற்றினார்கள்.

நாடு கடத்த ஒப்புக்கொண்டனர், 1948-ல் எனது ஒப்பந்தப்படி ஒரு மலையகத் தமிழரையும் வெளியேற்ற முடியாது.

எமது மொழியுரிமையையும், மலைநாட்டுத் தமிழரின் வாககுரிமையும் பறிபோய்விடடது. 1957ல் செல்வநாயகம் சிங்களத்தைத வட, கீழ் மாகாணங்களில்

# இலங்கையில் காந்தி நூற்றாண்டு நினைவு வேலைகள்

— சி. க. வேலாயுதபிள்ளை —

(செயலாளர், இயங்கை காந்தி சேவாசங்கம்)

மகாத்மா காந்தியடிகள் நூற்றாண்டு விழா இலங்கையில் தேசியகுழு அமைக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. மாணவர்கள் மத்தியில் கட்டுரைப் போட்டி, சித்திரப்போட்டி, பேச்சுப்போட்டிகள் நடந்தன.

பல மாவட்டங்களிலும் தத்துவப்பிரசாரம் நடைபெற்றது, பத்திரிகைகள் கருத்துப்பிரசாரம்செய்தன. பாரத நாட்டிலிருந்து ஸ்ரீ ஜெயப்பிரகாஷ்நாராயண் திருமதி விஷயலட்சுமி பண்டிட, தவத்திரு குன்றக்குடி அடிகளார் முதலியோர் விஜயம்செய்து தத்துவபிரசாரம் செய்தனர். இப்பெரியோர்களின் வருகையில் காந்தீய-சர்வோதய கருத்துக்கள் உரம்பெற்றன. புத்துயிர் பெற்றன. இந்தசூழ்நிலையை நிலைநிறுத்தி வளர்க்க அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் சில ஆக்கவேலைகளை தொடங்கியுள்ளது,

### சர்வோதய நிகேதன் கதர் வேலை

இரத்மலானை விமான இறங்குதுறைக்கருகில்சுமார் 2 ஏக்கர் நிலம் கொழும்பு இந்து கல்விச்சபையால் உதவப்பட்டுள்ளது இங்கு பிரதான கட்டிடத்துக்கு ஸ்ரீ ஜெயப்பிரகாஷ்நாராயண் அவர்கள் அத்திவாரமிட்டார்கள், கட்டிடவேலை சிரமதான அடிப்படையில் நிறைவேறிவருகிறது. இங்கு கதர் வேலையை மையமாகவைத்து பணியாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது இலங்கைக்கு சென்ற பெப்ரவரி மாதத்தில் கதர் ஏ. என். ராஜன் அம்பர் இராட்டையாகிய சஞ்சீவியுடன் வந்தார். மின்னல்வேக சுற்றுப்பிரயாணம் செய்து கதர் தத்துவப் பிரசாரம் செய்து திரும்பியுள்ளார். தமிழ்நாடு சர்வோதய சங்க மூலம் கதர் உபகரணங்களை இலங்கைக்கு கொண்டு வரவும் பயிற்சிஅளிக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள செலாவணிசட்டதிட்டங்களின்படி வெளிநாட்டுக்குநிதி அனுப்புவது கஷ்டமாகஉள்ளது,

எனவே தமிழ் நாட்டில் உள்ள கதர் அன்பர்களும் சர்வோதயதொண்டர்களும் இலங்கையில் கதர் இயக்கத்தை ஆரம்பித்து வளர்க்க தங்களால் இயன்ற கதர் உபகரணங்களையோ நிதியையோ தானம் செய்து உதவுவார்களாக இந்த உதவிகளை திருப்பூரிலுள்ள தமிழ்நாடு சர்வோதய சங்கத்துக்கு அனுப்பிவைத்தால் சர்வோதய சங்கத்தினர் கதர்பயிற்சி அளிப்பதற்கான உபகரண சாதனங்களையும் அனுபவம் ஆற்றல் ஆகிய தொழில் நுடப தார்மீகஉதவிகளையும் இலங்கைக்கு அனுப்பி உதவ வசதியாகும் இது காந்தியடிகளின் நூற்றாண்டு ஞாபக வேலைகளின் சிறந்த பணியாகும்.

### காந்திக் கிராமம்

அக்கராயன்குளம் விவசாயத்திட்டத்தின் மத்தியில் 300 ஏக்கர் நிலத்தை இலங்கை அரசாங்கம் அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்துக்கு கொடுத்துள்ளது. இங்கு காந்தி கிராமம் அமைககும் நோக்கத்துடன் பிரதான மண்டபத்துக்கு ஸ்ரீ ஜெயப்பிரகாஷ்நாராயணால் அத்திவாரம் இடப்பட்டுள்ளது. இங்கு வாலிபர்களுக்கு நவீன விவசாயம், கிராமகைத்தொழில்கள் யந்திரத்துறைகள் ஆகியபயிற்சி அளிக்கவும், காந்திசமாதான பல்கலைக் கழகம் அமைக்கவும் சாந்தி சேனை பயிற்சி முகம் நடாத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### கஸ்தூரிபாய் இல்லம்

இலங்கையில் தாய்க்குலத்தினருக்காக காந்திய சர்வோதய வழிமுறைகளைப் பின்பற்றி கஸ்தூரிபாய் இல்லம் அமைக்க 25 ஏக்கர் நிலம் அரசாங்கத்தால் உதவப்பட்டுள்ளது. இங்கு பிரதான கட்டிடத்துக்கு ஸ்ரீ ஜெயப்பிரகாஷ்நாராயணனும் திருமதி பரபாவதி தேவியும்சேர்ந்து அத்திபாரமிடடுள்ளனர்.

காந்தி நூற்றாண்டு ஞாபக வேலைகளாக மேற்படிமூன்று பணிகளையும் அகிலஇலங்கை காந்தி சேவா சங்கம் மேற்கொண்டுள்ளது. இப்பணிகளை நிறைவேற்ற சிரமதானமாகிய சரீர உழைப்பையும், மூலப்பொருள்கள், உபகரணங்கள் முதலிய சாதனதானத்தையும் சம்பத்துதானமாகிய நிதி உதவிகளையும் உதவுமாறு கோருகின்றோம்.

மக்கள் மத்தியில் பிரசாரத்திற்கு பத்திரிகைகள், நாடகத்துறையினர், பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் சமூக சேவா ஸ்தாபனங்களின் உதவிகளைக் கோருகின்றோம்.

கதர் கிராமகைத்தொழில் கமிஷன் இலங்கையில் கதர் கிராம கைத்தொழில் கண்காட்சியை நடாத்துவதற்கு கொள்கையளவில் ஒத்துக்கொண்டுள்ளது. இனிமேல் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசாங்கத்தினதும் இந்திய அரசாங்கத்தினதும் அங்கீகாரம்வேண்டும் இதற்கான முயற்சிகளும் கையாளப்பட்டுள்ளது.

இந்த வருட நடுப்பகுதியில் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்ரீசுப்பாராவ், ஸ்ரீநாராயண் தேசாய் ஆகிய சர்வோதய தலைவர்கள் இலங்கைவர விருக்கின்றார்கள் அவர்களது ஆலோசனைகள எங்களவேலைகளுக்கு உருப்படியான உதவிகளை அளிக்கும் என நம்புகின்றோம்.

ப்பட்டுக்கொண்டு ஊர்வலம் நடாத்தவிருப்பதால் பொலிஸ் பகுதியினர் அதற்கான ஒழுங்குகளை செய்து வருகின்றனர்.

சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் கீழ் இயங்கும் இலங்கை தொழிற் சங்க சம்மேளனம், சங்கானையிலிருந்து யாழ்ப்பாணம் வரை கூட்டாட்சி கட்சியினரும் ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் நடாத்துவதற்கான ஒழுங்குகளை செய்துள்ளார்கள்.

ஊர்வலங்களில் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான ஒழுங்குகளை பொலிஸார் செய்து வருகின்றனர்.

ஊர்வலங்களில்

# அசம்பாவிதங்களைத் தடுக்க பொலிஸாரின் யோசனை

யாழ்ப்பாணம், சனி

நியமன தினமான 23 ம் தேதி முதல் மே 28ம் தேதி வரை பொலிசார் கலவரத்தையுண்டு பண்ணுவோர் மீதும், கலவரத்தையுண்டு பண்ண முயற்சிப்போர் மீதும் கடும் நடவடிக்கை எடுப்பார்கள் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் நடந்த தேர்தல்களிலும் பார்க்க இத்தடவைபொலிஸார் மிகவும் கண்காணிப்பாக இருப்பார்கள் என்றும்அவர் தெரிவித்தார்,

ஊர்வலங்கள் இரவுநேரங்களில் நடைபெறுவதன் காரணமாகவே சில அசம்பாவிதங்கள் ஏற்படுவதாகவும் மாலை 6மணிக்கு முன்னரே ஊரவலங்களை முடித்துக் கொண்டால் நல்லதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இம்மாதம் 19ம் தேதி கொழும்பில் நடைபெறவிருக்கும் பொலிஸ் உயர்தர மகாநாட்டில் பலமுக்கிய விஷயங்கள் பற்றிஆலோசிககப்படவிருகிறது.

## இன்று பயணம்

கொழும்பு, சனி

இலங்கையில் கடந்த மூன்று மாதகாலம் தங்கியிருந்த முஸ்லிம் பெரியார் சங்கைககுரிய ரிபாய் மௌலானா அல்ஹாஜ் . பி நல்லகோயா இன்றுபிற்பகல் 3-15மணிககு கட்டுநாயககா விமான நிலையத்திலிருந்து விமான மூலம் அந்தரத் தீவுககுப் பயணமாகிறார்.

---

## ஆலயத்தில் தீ!

உடுப்பிட்டி வெள்ளி

வதிரி தேவரையாளி நரசிங்கர் ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் திடீரெனத் தீப்பற்றிக்கொண்டது. இத்தீவிபத்தைக்கண்ட அயலவர்கள் கூக்குரலிடவே வாலிபர்கள் விரைந்து வந்து தமது உயிரையும் பொருட்படுத்தாது எரிந்து கொண்டிருக்கும் கோயிலின் மேல் ஏறித் தீயை அரும்பாடு பட்டு அணைத்தனர்.

தக்க சமயத்தில் தீ அணைக்கப்பட்டதால் சிறுசேதமே ஏற்பட்டது. பிரஸ்தாப ஆலயதர்மகர்த்தாக்கள் நெருப்பை அணைத்தவாலியர்களைப் பாராட்டினர்.

## அப்பலோ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சியை தளக்கட்டுப்பாட்டு விஞ்ஞானிகள் மிகவும் அபாயம்சூழ்ந்த நிகழ்ச்சியென்று வருணித்தார்கள கட்டளைககலம் சேதமுற்றதற்குப் பின்னர் மூன்று வீரர்களும் அதற்குள ஒன்றுக இணைந்து கொண்டது இதுவேமுதல்தடவை. அதற்குமுன் சந்திரக்கலத்திலிருந்து ஒருவர்மாறி ஒருவர்கட்டளைககவத்தில் இருந்துவந்தனர்.

கட்டளைககலத்துடனிருந்த சேவைக்கலத்தையும், நிலாவாகனத்தையும்பிரித்துவிடும் கட்டமும் அபாயகரமானதாககருதப்பட்டது

பூமியின் காற்று மண்டலத்திற்குள் கலம் பிரவேசிப்பதற்கு முன்னர் கட்டளைக் கலத்திலுள்ள கருவிகள் யாவும் மீண்டும் சோதித்துப் பார்க்கப்பட்டன. அதே சமயம் வீரர்கள் சிறிய பாதைத் திருத்தம் ஒன்றையும் செய்துகொண்டிருந்தார்கள்.

சந்திரக் கலத்தில் வெப்பம் அதிகரித்துவருவதாகவும் வீரர்கள் முதலில் அறிவித்தார்கள். அதேசமயம் கட்டளைக் கலத்தில் பழுது பார்க்கும் வேலைகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன. தளக்கட்டுப்பாட்டதிகாரிகள் வீரர்களுடன் இடைவிடாமல் தொடர்புகொண்டு தகவல் அறிவதிலும். ஆலோசனை கூறுவதிலும் ஈடுபட்டிருந்தார்கள். வீரர்கள் மூவரும் மிக அமைதியுடனும், சாதுர்யமாகவும் தம் கடமைகளைச் செய்துகொண்டிருந்தார்கள்.

இதுவரை விண்வெளிக்குச் சென்று திரும்பியவர்கள் எவரையும்விட இந்த மூவருமே மிகப் பரபரப்பான நிலையில் ஓய்வுஒழிச்சலின்றி ஜீவமரணப்போராட்டம் ஒன்றை வெற்றிகரமாக நிகழ்த்த நேர்ந்துள்ளது

அப்பலோ-11 சந்திரனில் இறங்கிய நேரத்தில் நிலவிய பரபரப்பான சூழ்நிலை அப்பலோ-13 வீரர்கள் பூமிக்குத் திரும்பிவரும் நேரத்திலும் நிலவியது உலகெங்கும் உள்ள மக்கள் அனைவரும் இந்த வீரர்கள் மூவரும் பத்திரமாக பூமியில் வந்திறங்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்துகொண்டிருந்தார்கள்.

மூன்றரை நாட்களாக உலகை உலுககிய இந்த மனித நாடகம் நல்ல வேளையாக நல்லபடியாக முடிந்துவிட்டமைக்காக அப்பலோ-13 திட்டத்தில் ஈடுபட்டோர் அனைவரையும் அப்பலோ-13 வீரர்கள் மூவரையும் பாராட்டி அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் ஒரு விசேஷ செய்தியொன்றை உடனே வெளியிட்டார்.

நாதன் இசைக் கல்லூரியில் பிரின்சிப்பலாய் இருந்தது எல்லோரும் அறிந்த விஷயம்.

0 0 0

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ரவிசங்கரின் ஸிதாரோடு வயலின் வாசித்த உலகப் புகழ்பெற்ற பெஹூடி மெனுஹினுக்கு இவ்வருடத்து நேரு பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. மெனுஹின் ஒரு பால்ய மேதை. பதினெரு வயதிலேயே மிகச் சிக்கலான 'சிம்ஃபனி' ஒன்றை லண்டனில் வாசித்து, சங்கீத ரசிகர்களையும், விமர்சகர்களையும் பிரமிக்கச்செய்தவர். இந்திய சங்கீதத்தில் அவருக்கு மிகவும் ஈடுபாடு உண்டு சில வருடங்களுக்கு முன்புஇந்தியா வந்து சென்னையிலும் கச்சேரி செய்தவர்.

நேரு பரிசு இத்துடன் நான்காவது முறையாக வழங்கப்பட்டிருக்கிறது. இதை முதலில் பெற்றவர் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுகாரியதரிசியுதாண்ட் அமெரிக்க நீகிரோ விடுதலை தலைவரான (சுட்டுக்கொல்லப்பட்ட) மாட்டின் லூதர் கிங், எல்லைப்புறக் காந்தி என்று அழைக்கப்பட்ட கான் அப்துல் கபர்கான் ஆகியோர் மற்றவர்கள்.

—வழிப்போக்கன்